ஜகன்மோகினி

7

பிப்ரவரி 1951

JAGAN MOHINI

ESTD. 1923

அணா நான்கு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

க்ஷேம லாபங்கள்,

ஸ்ரீ கீதாசாரியனின் க்ருபாகடாக்ஷத்தினால் நம் அனைவர் இல்லத்திலும் பொங்கல் புது நாளன்று மங்களகரமாகப் பால் பொங்கி மகிழ்வித்திருக்குமென்று நம்புகிறோம்.

பொங்கல் விருந்தாக பாதாஞ்ஜலியை—மோகினியின் 100-வது காணிக்கையை—அளிக்கப் பெரிதும் ஆவல் கொண்டிருந்தோம்; பலவித அஸௌகர்யங்கள் காரணமாக அது ஈடேறச் சில தினங்கள் தாமதமாகுமென்றுணர்ந்து சென்ற இதழில் தெரிவித்து தாமதத்திற்கு மன்னிப்புக் கோரினோம்.

வாசகர்களின் பொறுமையைச் சோதித்து, அவர்களது ஆவலைப் பின்னும் தூண்டிவிட வேணுமென்று பகவான் ஸங்கல்பித்தான் போலும்! ஆசிரியைக்கு தேக அசுகமேற்பட்டு அதனால் குறித்த காலத்திற்குள் ஷை நவீனத்தை எழுதிமுடிக்க வொட்டாமல் தடை ஏற்பட்டது; தற்போது தான் உடல்நலம் உண்டாகிக் கதையும் பூர்த்தியாகி வருகிறது.

"அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா" என்பதற்கு இதுவும் ஒரு அத்தாட்சியாயமைந்துவிட்டது. இனி துரிதமாய் அச்சு வேலையும் ஓவிய அணியும் நடைபெறும்; எனினும் குறைந்தது பதினைந்து நாளாவது ஆகுமென்று எதிர்பார்க்கிறோம். ஆகையால் தயவுசெய்து பொறுத்திருந்து 20௳க்குள் "ஏன் இன்னும் வரவில்லை?" என்று கடிதம் அனுப்பாதிருக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தாமதம் தெய்வாதீனமாக ஏற்பட்டது என்பதைக் கவனித்து பொறுமை காட்டும்படி ப்ரார்த்திக்கிறேன்.

நூறாவது காணிக்கை வெளியாவதற்கு முன்னமேயே அன்பர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. முக்கியமாக கீழ்க்கோடியிலும் தென்மேற்கிலும் வெளிநாடுகளிலுள்ள மோகினி அன்பர்களின் வாழ்த்துச் செய்திகளும் பேராதரவும் அவர்களது ஆர்வத்தையும் கலைத்தொண்டை ரஸிப்பதிலுள்ள மேன்மையையும் உணர்த்துகின்றன. பிரதிபலனைக் கோராது பலர் தமது அன்பர்களைச் சந்தாதாரராக்கி உதவியுள்ளனர். அத்தகையோருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சதகவிழா—இலக்கிய காணிக்கையைக் குறித்துப் பாராட்டித் தலையங்கம் எழுதிய வேலூர் கெஜெட் பத்திரிகைக்கும், ஷை இதழில் ப்ரத்யேகக் கட்டுரை எழுதிச் சிறப்பித்துள்ள ஸ்ரீ. ஞானபாஸ்கர K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்களுக்கும் எமது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நியூஸ்ப்ரிண்ட் அகவிலை, பஞ்சம் இரண்டும் காரணமாகச் சென்ற இதழைச் சந்தா புதுப்பிக்காதவர்களுக்கு அனுப்பவில்லை. அதிக பாக்கியுள்ள ஏஜண்டுகளுக்கும் அனுப்பவில்லை. இப்பத்திரிகையைக் கண்ணுறும் அன்பர்கள் தம் ஊரில் சரியானபடி மோகினி விநியோகம் செய்யப்படவில்லையெனக் கருதினால் தகுந்த நாணயம்வாய்ந்த ஏஜண்டைச் சிபார்சுசெய்யும்படிக் கோருகிறோம்.

வெகு காலமாகக் கைவசமில்லாதிருந்த அனாதைப்பெண், க்ருபாமந்திர், மலர்ந்த இதழ்—மூன்று நவீனங்களும் புதியபதிப்புகள் வெளியாகியுள்ளன. தேவைக்கு ஆர்டர் செய்யவும்.

"பாதாஞ்ஜலி" க்கு இன்னும் பணமனுப்பிப் பதிவு செய்யாதவர்கள் ரூ. ௨. அனுப்பிப் பதிவு செய்யும்படிக்கோருகிறேன். உயரிய கிளேஸ் பதிப்பு. பல படங்களுடன். விரைவில் வெளிவரும்.

வை. மு. கோ.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
- திருவள்ளுவர்.

ஜகன்மோகினி யென்னுஞ் சந்திரிகையைக் காக்க
ஜகன்மோகினி!
மனத்தைச் சார்ந்து.
- வீரராகவ கவி

Vol. 28. விக்ருதி ௵ February
No 2. தை ௴ 1951.

இன்றைய முக்கிய தேவை.

உள்நாட்டு ப்ரச்னைகளிலும் உலகச் சிக்கல்களிலும் இன்று காணும் நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க நமக்கும்—ஏன், எவர்க்கும்— வேண்டிய சஞ்ஜீவி ஒற்றுமையும் ஒத்துழைப்பும்தான். இதையே அ. இ. கா. கமிட்டியின் தீர்மானம் அறிவுறுத்துகின்றது.

பெரும் ப்ரச்னைகளைத் தீர்க்க பெருவாரியான நல்லெண்ணமும் நன்முயற்சியுமே தேவை. நாட்டுக்கு நலனைத்தேடித்தந்து, நாட்டின் நிர்வாகத்தில் ஈடுபட்டிருக்கும் நம் காங்கிரஸ்-க்குள்ளேயே சிறு பிளவுகள் தோன்றியுள்ளதானது அதிருப்தியின் அறிகுறியே.

காங்கிரஸ்-க்குள்ளேயும், இதர பொதுமக்களுக்கிடையேயும் ஒத்துழைப்பு - மனப்பான்மை என்றையும்விட இப்போது மிக முக்கியம். பூரண சுதந்திரம் கிடைத்துவிட்ட பிறகு, அதற்கு மூலகாரணமாயிருந்த பெரியதோர் ஸ்தாபனத்திற்குப் பொது மக்கள் ஆதரவைக் குறைப்பது அடாத செய்கையாகும்.

அதிருப்திகரமான அம்சங்களும் குறைகளும் காணப்படுவதென்னமோ வாஸ்தவந்தான். அவைகளைக் காரணமாக வைத்து ஆதரவைக் குறைப்பதைவிட, அவைகளைச் சீர்படுத்துவதையே கருத்தாக வைத்து ஒத்துழைப்பு காட்டுவதே கடமையாகும்.

இப்போதுள்ள சூழ் நிலையில் காங்கிரஸ் லக்ஷியமும் சர்க்கார் லக்ஷியமும் வேறன்று: மக்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதே இரண்டின் கருத்தும். இதில் வெற்றியளிக்க சகல அம்சங்களிலும் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் காட்டுவதே நமது கடமையாகும்.

— வை. மு. ஸ்ரீ.

ஒவ்வொரு ப்ரச்சினையும்—செயலாக்கி
உண்மைப் பணிபுரிவோம்
துவ்விய செந்தமிழர்—வருவீர்
தொண்டுகள் செய்திடவே!

— சுத்தானந்தபாரதி.

1—2—51
183169.

பி. ஸ்ரீ.

சுதந்திரம் வாழ்க, சுபிட்சம் தழைக!

ஜவாஹர்லால்நேரு: இந்தியாவின் பிரதம மந்திரியும் இந்திய மக்களின் வீரத் தலைவரும் வழிகாட்டியும்.

ஜவாஹர்: வீரமுரசு கொட்டிக் காந்தியடிகளின் அறப் போராட்டத்தை அவரது பிரதான தளபதியாக நடத்தி வெற்றி பெற முடித்தவர்.

ஜவாஹர்: வெளிநாட்டுச் சுரண்டலையும் உள்நாட்டுச் சுரண்டலையும ஒருங்கே வெறுப்பவர்.

ஜவாஹர்: 'துறக்கப் படைத்ததே செல்வம்' என்ற உறுதி யுள்ளத்துடன் தியாகமுரசு கொட்டிச் சிறைபுகுந்தவர்.

ஜவாஹர்: நிறத் திமிரையும் இனத் திமிரையும் சாதித் திமிரையும் செல்வத் திமிரையும் 'சகிக்கமாட்டோம்' என்று முழக்கியவர்;—இன்றும் அத்தகைய நீதிமுரசை உலகெங்கும் எதிரொலிகொள்ள முழக்கிவருபவர்.

ஜவாஹர்: இந்தியாவின் விடுதலைக்கு மட்டுமா, ஆசியாவின் சுதந்திரத்திற்கும் துணிந்து வாதாடியவர். இந்தியாவை ஆசியாவின் திலகமாக்கி 'அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் புகழ் மணக்க' அழகு செய்து அன்னை குமரியாகி வீற்றிருக்க, அருந் தவம் புரியும் அதிசயச் சித்தர்.

ஜவாஹர்: உலகிலேயே போராட்டம் ஒழிந்து சமாதானதேவி கொலுவீற்றிருக்கவேண்டுமென்று லட்சியபஜனை செய்யும் பக்தர். உலகம் உருப்பட ஆசியநாடுகளின் மதிப்பு உயரவேண்டு மென்பதையும், இந்தியா வலிமை வாய்ந்த குடியரசாக வளமுற்று வளர்ந்தோங்கவேண்டு மென்பதையும் இராக்கனவாகவும் பகற் கனவாகவும் காண்பவர்.

ஜவாஹர்: 'குறுகிய புத்தி வேண்டாம்; குறுகிய தேசிய மனோபாவத்தையும் ஒதுக்கித்தள்ளுங்கள்; உலக ஒற்றுமையை லட்சியமாககொண்டு முன்னேறுங்கள்; கிழக்கும் மேற்கும ஒத்து வாழப் பணிபுரியுங்கள்' என்றெல்லாம தீர்க்க ஆலோசனைகள் சொல்லுகிறவர்.

ஜவாஹர்: பழைய பழக்க வழக்கங்களைத் தாக்குகிறவருமல்ல, தாங்குகிறவருமல்ல. பழமையைப் பழித்தும் அழித்துமவரும் புது நாகரிகத்தை இந்தியா தன் அடிப்படைக் கொள்கைகளுடன் இசைத்துக்கொள்ளவேண்டும; பழமை தந்த பரிசுகளுடன் புதுமை நெருங்கி நட்புகொள்ளவேண்டும் என்கிறார். இந்தியாவின் சரித்திரப்போக்கை நன்கு கவனித்து மேனமேலும நாம் அபிவிருத்தி அடையவேண்டும என்கிறார்.

ஜவாஹர்:— 'உயிருள்ளவரை நாட்டுக்குப் பணிபுரிந்து கொண்டேயிருப்பேன்' என்று விரதம்பூண்டு அல்லும் பகலும் உழைத்துவருகிறார்.

ஜவாஹர்: குழந்தையுள்ளங்கொண்ட ராஜதந்திரி; குழந்தைகளுடன் குழந்தையாகக் கலந்து உறவாடுகிறார். குழந்தையுள்ளத்துடன் தாயன்மையுள்ளமும் கொண்டவர்.

ஜவாஹர்: மகாத்மா இந்தியாவுக்கும் உலகத்திற்கும் அளித்த மகத்தான பரிசு; 'புத்தரும் காந்தியும கீதையும் என அரசியல் ஆசிரியர்கள்' என்கிறார்.

ஜவாஹர்: ஸர்வதேச அரங்கில் இந்தியாவின் பெருமையை உயர்த்திவருகின்றவர். தமிழகத்தின் பெருமையையும் நன் குணர்ந்து, தாம் எழுதியுள்ள 'உலக வரலாறு' என்ற பேர்பெற்ற நூலில் தமிழகத்தின் தொன்மை மாட்சியைப் பாராட்டியுள்ளார். சோழ ஸாம்ராஜ்யத்தையும் ராஜராஜசோழனையும் கங்கைகொண்ட சோழனையும் விசேஷமாய்க் குறிப்பிடுகிறார்.

ஜவாஹர்: 'பழைய இந்தியக் கலையின் சொரூபத்தைக் காண வேண்டுமென்றால் தென்னிந்தியாவுக்குத்தான் செல்லவேண்டும்' என்று கூறியுள்ளார். இவர் கலைஞர், கலைத்திறனை மதிப்பிடும் ஆற்றல் வாய்ந்தவர்.

ஜவாஹர்: பிறவித் தலைவரும் பெருஞ் சிந்தனையாளரும் ஸர்வ தேசிய வாதியுமாகியவர், கலைச் செல்வராகவும் விளங்குகிறார். இவர் எழுத்திலும் பேச்சிலும் கலை மணம் கமழ்கிறது; கலைச் சுவை சொட்டுகிறது; கவித்திறன் இனிது புலனாகிறது.

ஜவாஹர்: ராஜபோகத்தை உதறித்தள்ளி, கலைத்துறையில் தமக்குக் கிடைத்திருக்கக்கூடிய பதவியையும் துறக்கத் துணிந்து, தியாக நெருப்பிலே குதித்து அந்த அக்கினி ஸ்நானத்தால் தூய்மைபெற்றவர்.

ஜவாஹர்: ஆளும் அழகு, பணியும் அழகு, பண்பாடும் அழகு. காந்தியடிகளின் சமய நம்பிக்கையில் தாம் நம்பிக்கைகொள்ளா மலே அடிகளிடம் நம்பிக்கைகொண்டு அவரது அடிச்சுவடுகளை இவர் பின்பற்றியதும், அலாதி அழகு வாய்ந்த அரும்பெரு நிகழ்ச்சிதான்.

ஜவாஹர்: நமது பூர்ண சுதந்திர ஜனநாயகக் குடியரசின் இன்றைய ரட்சகர். தேச பிதாவான காந்தியடிகளுக்கு அடுத்தபடி யாக இந்திய மக்களின் இதய சிம்மாசனத்திலே வீற்றிருக்கின்றார்.

ஜவாஹர்: இந்து முஸ்லிம் பண்பாடுகளும் மேலை நாட்டுப் பண் பாடுகளும் ஸமரஸமாய்க் கலந் தொளிரும் ஜீவரத்தினம்.

ஜவாஹர்: வாக்கினால் திக்விஜயம் செய்து நோக்கினால் நம்பிக்கை யூட்டும் ஸமதர்மவாதி. கோபமும் குணமும் ஒருங்கே எல்லையற்ற அன்பைப் புலப்படுத்துமாறு விளங்கும் ஓர் அதிசய புருஷர்.

ஸத்புத்திரனாகவும் உத்தமசகோதரனாகவும் ஸதி கமலாவுக்கு இசைந்த பதியாகவும், சிறந்த தந்தையாகவும் நண்பராகவும் சிறு குழந்தைகளின் செல்லத் தோழராகவும் திகழ்ந்த ஜவாஹர்லால் நேரு, சுதந்திர இந்தியாவின் உலகம் புகழும் பிரதம மந்திரியாகி, சுபிட்சஇந்தியாவை நோக்கிநோக்கி நம்மைச் செலுத்த முயல்கிறார்.

செங்குத்தான அபாயச் சுதந்திரப் பாதையில் தாம் சென்று கொண்டே தம் குடும்பத்தினரையும் அதே பாதையில் அழைத் துச் சென்றவர், இன்று உலகத்தையே தம் குடும்பமாக மதித்து உலக சாமதானத்திற்காகவும் நியாயத்திற்காகவும் போராடுகிறார்.

நேருகுடும்பம் செல்வம் நிறைந்த, ஆடம்பர வாழ்க்கைக்குப் பேர்போன, மேலை நாட்டு நாகரிகப் பழக்கமுள்ள குடும்பமாக இருந்தது. பெரிய நேரு (ஜவாஹரின் தந்தை) சம்பாதிக்கத் தெரிந்தவர்; ஆனால் சேமிக்கத் தெரிந்துகொள்ளாதவர். அவரது சமையல் இலாகாவே பிரமாதம். வேலைக்காரர்களே ஒரு பட்டா

ளம். 'ஆனந்தபவனம்' என்றதுமே 'ஆனந்த ஆடம்பர வாழ்க்கைதான் என்பதை அறியாதார் யார்?

இத்தகைய குடும்பத்திலே மெலிந்த, உபவாஸத்தால் ஒட்டிப்போன உருவம் இடுப்புத்துண்டுடன் கோலின் உதவியால் மெள்ள நுழைந்தது. அந்த வருகையும், அந்த முகத்திலே தவழ்ந்த வசிகரமான புன்னகையும், நேரு குடும்பத்திலே புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கிவிட்டன.

பெரிய நேரு அலசி ஆலோசித்துக்கொண்டிருக்கையில் ஜவாஹருள்ளம் துள்ளிக்குதித்துக் காந்தியடிகளைத் தொடர்ந்தது; தந்தையும் தனயனைப் பின்தொடர்ந்தார்.

1921-ல் முதல்முதல் அரெஸ்டு வாரண்டுடன் தோன்றிய போலீஸ்காரர்கள் பிறகு அடிக்கடி விஜயம்செய்தார்கள். துன்பத்திற்கு மேல் துன்பம் தொடர்ந்தது. அருமை மனைவியார் கமலா நேரு நெடுங்காலம் நோய்வாய்ப்பட்டிருந்து 1936-ல் காலமானார்.

இந்தியாவுக்குப் பூர்ண சுயராஜ்யம் வேண்டும் என்ற தீர்மானத்தை முதலில் கொண்டுவந்தவர்கள் ஜவாஹரும் நேதாஜியும்தான். ஜவாஹரின் கொள்கை-மேம்பாடு அன்றும் இன்றும் இந்தியாவுக்கு அரணை அமைந்திருக்கிறது.

ஜவாஹர்லால் இன்று பண்டித ஜவாஹர்லாலும் அல்லர். 'பண்டிதர்' முதலான பட்டங்களும் ஜாதியைக் குறிக்குமானால் துறக்கப்படவேண்டும் என்பது ஜவாஹர்லாலின் தேர்ந்த கொள்கை. இப்படி ஏழைகளோடு தோழமை பூண்டிருக்கிறார் நமது பிரதமமந்திரி.

தன்னை மறந்து பக்தி செய்யும் பக்தனைக் குறித்துக் கேட்டிருக்கிறோம், பார்த்திருக்கிறோம். தம்சம்பளத்தை மறந்து உத்தியோகம் பார்க்கும் உத்தியோகஸ்தனையோ, மந்திரியையோ, ராஜதந்திரியையோ பார்த்திருக்கிறீர்களா, அல்லது கேட்டிருக்கிறீர்களா? ஒரு சமயம் விஷயாலோசனைக் கமிட்டியில் பேசும்போது ஜவாஹருக்கு 'நாம் எவ்வளவு சம்பளம் வாங்குகிறோம்?' என்பதே ஞாபகம் இல்லை.

அப்போது ராஷ்டிரப்தியாக இருந்த பட்டாபி சீதாராமையாவின் பக்கம் திரும்பி ஜவாஹர்லால், 'நான் எவ்வளவு சம்பளம் வாங்குகிறேன் என்பதைத் தயவுசெய்து ஞாபகப்படுத்துங்கள்' என்று கேட்டார். பிறகு ஸர்தார் பட்டேலின் பக்கம் திரும்பினார். அது கண்டு சபையில் ஒரே சிரிப்பு ஏற்பட்டது.

இப்படித் தன்னை மறந்து தேசபக்தியிலே லயித்துப்போயிருக்கும் ஜவாஹர் வாழ்க! வாழ்க சுதந்திரம், தழைக சுபிட்சம்!

வெகு காலமாகக் கைவசமில்லாதிருந்த

மலர்ந்த இதழ்

(இரண்டு பாகங்கள்)

வை. மு. கோ. 64-வது நாவல் புதிய பதிப்பு
வெளிவந்துவிட்டது.

உயரிய கிளேஸ் பதிப்பு. பல படங்களுடன்

ரூ 2—8—0

பத்திரிகை தர்மம்

[பத்திராதிபர் மகாநாட்டில் (28—1—51) பேசியது.]

நா...பேனு இரண்டும் உலகை நடத்துகின்றன. இரண்டும் ஒரு தேசத்தின் முன்னேற்ற சக்திகள். நெப்போலியன் ஆல்ப்ஸைப் படையெடுக்கச் சென்ருன். முதலில் "பேனு செல்க" என்ருன்; பத்திராதிபர்கள் முன்னே சென்றனர். பிறகு வாள்வீரரை நடத்தினன். முடிவில் "பேனு வருக" என்ருன். நிருபர் கூட்டம் வந்தது. ஒரு நாட்டின் முன்னணியில் பத்திராதிபர்களும் பின்னணியில் பத்திரிகை நிருபர்களும் இருக்கவேண்டும். முன்னும் பின்னும் நாட்டை யாளுவது பேனுதான் என்பது நெப்போலியன் கொள்கை. "வாளினும் வலியது எழுதுகோல்" என்ருன் நெப்போலியன். இதை நமது நாட்டில் இன்றும் காண்கிருேம். அச்சும் மேடையும் அரங்கும் நமது தேசாவேசத்தை ஊக்கின. நாஞசாகெபுமுதல் நேதாஜீவரையில் வாள்போர் புரிந்தனர். திலகர்முதல் காந்திவரையில் சொற்போர் புரிந்தனர். இவர்களுக்கெல்லாம் பின்னணியில் நின்றது எழுத்தாளரின் பேனுதான், பத்திரிகைதான்.

இன்றுநாம் சுதந்த்ரம் அடைந்தோம், கணராஜ்யமாக வாழ்கிருேம் என்ருல், அதன் பெருமை யாருக்கு? மேடைவீரருக்கு மட்டுமா? சிறைகாத்த தியாகிகளுக்கு மட்டுமா? இல்லை. இரவும் பகலும் பேனப் பிடித்து நாட்டின் சுதந்தரவேள்விக்கனலைத் தூண்டிவளர்த்த பத்திராதிபர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் அந்தப் பெருமை உரியது. திலகருக்குச் சூட்டும் மாலையை நான் கஸ்தூரிரங்கையங்காருக்கும் சூட்டுவேன். லாலாஜீக்குச் சூட்டும் மாலையை நான் ஜி. சுப்ரமணிய ஐயருக்கும் சூட்டுவேன். சித்தரஞ்ஜனருக்குச் சூட்டும் புகழ்மாலையை துஷார்கோஷுக்கும் சூட்ட வேண்டும். ஹிந்து, சுதேசமித்திரன், தினமணி, இந்தியன்எக்ஸ்ப்ரஸ், மராடா, கேஸரி, பாம்பே க்ரானிகிள், ஆந்த்ரபத்ரிகா, மாடர்ன்ரிவ்யூ, அம்ருதபஜார், பீபிள், ப்ரதாப், தேஜ் போன்ற பத்திரிகைகள் தேசத்திற்குச்செய்த சேவை திலகர் காந்தி செய்த சேவைகளுக்கு உறுதுணையாக நின்றன. தேசத் தலைவர் மனதில் பூத்த எண்ணங்களை நாடெல்லாம் பரப்பும் மின்சார வேகவாகினிகளே பத்திரிகைகள்.

நமது நாட்டில் அரசியல், சமுதாயவாழ்வு, கலைப்பண்பு, இலக்கியம் பொதுநல உணர்ச்சி அனைத்தையும் உருவாக்கியவர் யார்? பத்திராதிபர். மஹாத்மாஜியின் யங் இந்தியாவும், ஹரிஜனும் புதிய பாரதத்திற்கு வேதங்களாக விளங்கின. மகாத்மாவின் மெல்லிய குரலைவிட அவரது ரத்தினச் சுருக்கமான எழுத்திற்கு அபாரமான சக்தியிருந்தது. உலகப்பெரியார் பலர் பத்திரிகாசிரியராயிருந்தனர். இங்கிலாந்தின் சக்திபெற்ற நாவலஞன டிகேன்ஸ் பார்லிமெண்டரி பேச்சுக்களை தினசரிப்பத்திரிகைகளுக்கு எழுதும் நிருபஞகவே வாழ்க்கையைத் தொடங்கினன். அவனது புகழ்பெற்ற பிக்விக்பேபர்ஸ் லண்டன் பத்திரிகைக்குச் செய்த விஷயதானமே. "டிகென்ஸ் இன்று எழுதியதை இங்கிலாந்து நாளை நினைக்கும்" என்பது பழமொழி.

இத்தாலிய வீரனான மஜினி, யங் இதாலியா என்ற பத்திரிகையினாலேதான், ஜனங்களை ஆவேசப்படுத்தினான். அதில் அவன் எழுதிய கட்டுரைகள் சிறந்த இலக்கியப் பொக்கிஷங்களாக இன்றும் விளங்குகின்றன. திலகர் மராடா மூலம், பாரதி இந்தியா மூலம், அரவிந்தர் வந்தேமாதரம் மூலம், லாலாஜீ பீபிள்ஸ் மூலம், தாஸ் பார்வேட் மூலம் எழுதிய எழுத்துக்கள் நாட்டிற்குப் புத்துயிர் அளித்தன. ஷெரிடன் 'நல்ல எழுத்தாளரே நல்ல செயலாளர்' என்கிறான். பெர்னார்டு ஷா 'பத்திரிகையே இலக்கியம், இலக்கியமே பத்திரிகை' என்கிறான். டெய்லி மிர்ரர், போஸ்டு, மெர்க்யூர் த ப்ரான்ஸ், லெ மாதான், மாடேன் ரிவ்யூ, இந்து முதலிய பத்திரிகைகளைப் பார்த்தால் இதன் உண்மை புலப்படும். முஸலோனி ஆசிரியரிலிருந்து நாட்டுத்தலைவனாக உயர்ந்தது "போப்பொலோ திதாலியா" என்ற பத்திரிகையால்.

பத்திரிகை ஒரு தனி உலகம். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் உழைப்பினால் அது நடக்கிறது. மலர்களில் தேன் சேர்ப்பதுபோல் நிருபர்கள் அங்குமிங்கும் அலைந்து செய்திகளைத் திரட்டித்தருகிறார்கள். அதை எழுத்தாளரும் ஆசிரியரும் உருவாக்குகிறார்கள். அச்சாளர் கோக்கிறார்கள். அடிப்பாளர் யந்திரத்தில் அடிக்கிறார்கள். மடிப்பாளர் மடித்துத்தைத்து உருவாக்கி அனுப்பாளர் கையில் தருகிறார்கள். தபாலும் ரயிலும் சுமந்துவந்து ஏஜெண்டுகளுக்குத் தருகின்றன. ஏஜெண்டுகள் பொதுஜனங்களுக்குத் தருகிறார்கள். பொதுஜனங்கள் படித்துச் செய்தி பரப்புகிறார்கள். நாடு விழித்தெழுகிறது. இதழாசிரியர் காட்டிய வழியில் நடக்கிறது. தலைவர் நாவினால் செய்வதைப் பத்திராதிபர் பேனாவினால் செய்கிறார்.

பத்திரிகை காலக்கண்ணாடியாகும். காலநிகழ்ச்சிகளை விமர்சனம் செய்து ஜனங்களுக்கு வழிகாட்டுவதே பத்திரிகாசிரியர் வேலையாகும். ஒன்றைத் தாக்கும்போதும் ஊக்கும்போதும், ஆக்கும்போது நீக்கும்போதும் தேசநன்மையை முன்வைத்துக்கொள்ள வேண்டும். நம் எழுத்து தேசத்திற்கு நலமா, தீதா; அது ஒற்றுமையை வளர்க்குமா, வேற்றுமையை வளர்க்குமா, அது ஜனங்களைச் சுதந்தரத்திற்கு நடத்துமா, அடிமைக்குழியில் வீழ்த்துமா, நம் எழுத்து நாட்டுக்குப் பெருமைதருமா, சிறுமைதருமா என்பதைக் கருதி [illegible] எழுத்தாளர் ஒவ்வொரு எழுத்தையும உருவாக்கவேண்டும். நாட்டில் பிரிவினையும் பிளவு கட்சிபேதமும் வகுப்புக்கலகமும் போரும்பிணக்கும் பொறாமைத்தீயும் தூண்டும் எந்தப் பத்திரிகையும் நல்ல பத்திரிகையாகாது. உலகசரித்திரத்தில் இத்தகைய பத்திரிகைகளுக்கு மதிப்பே கிடையாது. இங்கிலாந்தில் Regeneration என்று ஒரு பத்திரிகையிருந்தது. எல்லாரையும் திட்டுவதே அதன் தொழில். கட்சிவாதத்தைக் கிளப்பி வேறுபாடுண்டாக்குவதே அதன் வேலை. அது பெர்னார்டு ஷாவைக் குறிவைத்தது. அவனது நாடகமுகவுரைகளை நையாண்டி செய்தது. "தென்னமரக் குரங்கு ஒன்று லண்டனில் இருக்கிறது. அது தேங்காயை ஜனங்கள் மண்டையில் உருட்டி விடுகிறது—கிழக்குரங்கு" என்றது. அதற்கு ஷா ஒரு பதில் கொடுத்தான். "லண்டனில் தென்னமரம் கிடையாது, தேங்காயும் உருட்டிவிடமுடியாது. அப்படிச்செய்யும் ஒரு குரங்கு இருக்கு

மானுல் அந்தக் குறும்புக்காரக் குரங்கு Degeneration டிஜென ரேஷ்னே'' என்றான். பத்திரிகை பெயர் ரீ ஜெனரேஷன். அதை ஷா டி ஜெனரேஷன் என்றதுமே பத்திரிகைக்கு மதிப்புப்போய் விட்டது. லிபர்டிபத்திராதிபரான டக்கர் ஷாவுக்குப்பெருந்தொகை தந்து அந்த வசைப்பத்திரிகையை ஒழிக்கப் பேனுப் பிடியும் என்றார். ஷா நான்கே கட்டுரை லிபர்டியில் எழுதினர். சாக் கடைப்பத்திரிகை போக்கிடமில்லாமல் ஒழிந்தது. 'நாட்டின் பெரு மையைக் காட்டுவதே பத்திரிகை தர்மம்' என்றார் ஷா. காலம், கடமை இரண்டையும் பத்திராதிபன் அறியவேண்டும். நேற் றிருந்த காலநிலை வேறு, இன்றுள்ள நிலை வேறு. நேற்றுலகம் வேறு, இன்றுலகம் வேறு. நேற்றைத் தேவைகள் வேறு, இன் றுத் தேவைகள் வேறு. கூடென்பர்க் Goutenberg என்ற ஜெர் மானியனே முதலில் அச்சகம் நாட்டினன். பகைவர் அவனைக் கொடுமைசெய்து அச்சகத்திற்கும் தீவைத்தனர். அப்போது அவன் சொன்னான்: "ஐயா நான் வைத்தது வெறும் அச்சகம் இல்லை. நான் ஒரு ஞான தீபத்தையே ஏற்றிவைத்தேன். அதை எந்தப் புயலும் அணைக்கமுடியாது. அதன் ஒளிதான் மனித சமுதாயத்தின் இருளைப் போக்கி இன்பம் அளிக்கும். அந்த ஒளியே கட்டுண்ட நாடுகளுக்குச் சுதந்தரமும் சுதந்தரநாடுகளுக்கு ஒற்றுமையும், சமுதாயத்திற்கு இன்பவாழ்வும் அளிக்கும்.'' என்றான். அந்தச் சொல்லை நிறைவேற்றுதலே என்றும் பத்திரி கையின் கடன், எழுத்தாளர் கடமையுமாகும்.

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி R. ஸ்ரீநிவாஸன்

தாய்மார்களுக்கு ஒரு வேண்டுகோள்

நாடெங்கும் உணவு பற்றுக் குறையால் மக்கள் பரிதவிப்பது சர்க்காருக்கும் நமக்கும் பெரிய புதிராயிருக்கிறது. அதை விடு வித்து நாடு உய்வுறவேண்டுமானல் அரசாங்கம் அல்லாமல் ஒவ்வொரு இந்தியனும், இந்தியப் பெண்ணும் சுத்த உள்ளத் துடன் தாய் நாட்டுக்குத் தம கையாலான சேவை புரியவேண்டும்.

அதாவது ஒவ்வொருவரும் தங்கள் பங்குக் காரியத்தை தர்ம புத்தியுடனும், ஈவு இரக்கத்துடனும், செவ்வையாகவும் செய்வ துடன் பாபத்துக்கு அஞ்சினவர்களாக, சத்தியத்தைக் கடைப் பிடித்தவர்களாக வாழ்க்கையை நடத்தினல் [illegible]; "என்ன வாழ்வோ, என்ன கதையோ! இந்த அர்சாங்கம் பங்கிடும் பங்கீடு (ரேஷன்) அரைவயிற்றுக்கும் போதாது. இட்டிலி, தோசை செய்து சாப்பிட்டு வருடக் கணக்காகிவிட்டது. குழந்தைகள் 'மைசூர்பாகு பண்ணிகொடேன், பர்பி பண்ணிக்கொடேன்...' என்று நச்சரிக்கிறதுகள், பாவம்!..."கறுப்பு மார்க்கேட்டில் கொஞ்சம் அரிசியும் சர்க்கரையும் வாங்கிக்கொண்டால் அதுவும் தோஷம் என்று அரசாங்கம் அபராதம் விதிக்கிறது'' என்று முனகுபவர் களோ பல பேர்.

"வேண்டாம் அம்மா, தாய்மார்களே! தயவுசெய்து கறுப்பு மார்கெட் வியவகாரத்துக்குப் போகவேண்டாம். அது எவ்வளவு

பெரிய அபராதம் தெரியுமா? ஒரு கூலி இருக்கிறுன். நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டும்படி நாளெல்லாம் உழைத்து நாளுக்கு ஆறணுவோ எட்டணுவோ சம்பாதித்துத் தன் வயிற்றையும் மனைவிமக்களின் வயிற்றையும் வளர்க்கிறுன். அதென்னவோ காரணத்தால் நாலைந்துநாள் சேர்ந்தாப்போல் அவனுக்கு எவ்வகையிலும் கூலிவேலை கிடைக்காமல், அவனும் அவனுடைய மனைவிமக்களும் பட்டினிகிடக்க நேரிடுகிறது. எப்படியாவது நாலு காசு சம்பாதித்துக்கொண்டுவந்து தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கிளம்புகிறுன், அந்த அப்பாவி மனிதன்! எவ்வளவு முயன்றும் நாலணு பிழைப்புக்கும் வழியின்றிப் போகவே, திருடியாவது வயிறு வளர்க்கவேண்டுமென்ற நிச்சயத்துக்கு வருகிறுன். கடைசியில் ஒருவர் வீட்டில் கன்னம் வைத்தானென்று அவனை போலீஸ்காரர்கள் கையும் களவுமாகப் பிடித்து கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்த மேஜிஸ்ட்ரேட் அவனுக்குக் கடுமையான சிக்ஷை விதிக்கிறுர். வயிற்றுக்கு இல்லாத கஷ்டத்தினுல் திருடினுன் என்று சமூகம் அவனை தண்டிக்காமல் சும்மா விட்டுவிட்டதா என்ன? அதேபோல்தான் இக் கறுப்புமார்க்கெட் (Black-market) வியவகாரம் கூட. நமக்கு தற்சமயம் கொடுக்கும் ரேஷன் போதாதுதான், ஆமாம்; ஆனுல், நாட்டின் தற்பொழுதைய கஷ்ட நிலைமையில் நமக்கு இவ்வளவாவது ரேஷன் கிடைக்கிறதே,......ஒரு பொழுது சாப்பாட்டிற்கும்வழியின்றி எவ்வளவோ பேர் பரிதவிக்கிறுர்களே, பாவம்!...என்று நமக்குக் கிடைக்கும் ரேஷனுக்காக நாம் திருப்தியுடன் இருக்கவேண்டும். பங்கீடு போதாதென்று கறுப்பு மார்க்கெட்டில் வாங்கிவந்து பட்சணம் பணியாரம், பண்டிகை சாப்பாடு, விருந்து சாப்பாடு என்று கொண்டாடுவது மகா அபராதம். இது திருட்டுத் தொழிலைவிட பதின்மடங்கு அதிகப்படியான அபராதமாகும். நாலுபேர் ஏழை எளியவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பங்கிடை அவர்களது வயிற்றுக்கு வஞ்சகம்செய்து அவர்களுக்குச் சேரவேண்டிய தானியம், சர்க்கரை முதலியன விற்கும் கறுப்பு மார்க்கெட் வியாபாரி திருட்டுத்தனமாக சேகரித்து வைத்துகொண்டு ஒன்றுக்குப் பதின் மடங்கு விலை உயர்த்தி விற்கிறுன். அதை நாம் திருட்டுத்தனமாக அதிக விலைக்கு வாங்கிவந்து உபயோகிப்பதில் லாபம் என்ன? பாபமூட்டை சுமப்பது ஒன்றுதான்!

தாய்மார்களே! தயவுசெய்து இந்தப் பாபவழியில் போகாமல் ரேஷன் போதாமல்போனுல் கறுப்பு மார்க்கெட்டில் ஒன்றுக்குப் பதின்மடங்கு பணம் கொட்டி வாங்குவதற்கு பதிலாக அதே விலையை பால் தயிர், வெண்ணெய், பழம், கறிகாய், கடலை, பயறு, வேர்க்கடலை முதலிய ரேஷன் அல்லாத உணவுப்பொருள்களை வாங்கி சாப்பாட்டுக்கும் டிபனுக்கும்ரேஷனுடன் சேர்த்து உபயோகித்து வந்தால் ரேஷன் கூடிவரும். உடலுக்கும் புஷ்டி, நாட்டுக்கும் உபகாரமாகும். இதுவே என் தாழ்மையான வேண்டுகோள்.

ஜகன்மோகினி
தனிப் பிரதி அணு 4.
வருடச் சந்தா 3—0—0.

அபூர்வ ராமாயணம்

6. க: த்ருடவ்ரத:?

ஸ்ரீ ப்ர. ப. அண்ணங்கராசாரியர்

சென்ற இதழ் தொடர்ச்சி,

வான்மீகிநாரத ஸம்வாதத்தில் "ஸ: த்ருடவ்ரத:" என்கிற ஆறுவது வினா இப்போது விவரிக்கப்படுகின்றது. திடமான விரதமுடையவன் யாவன்? என்று வினவுகின்றார் வான்மீகி முனிவர். ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேணுமென்கிற சங்கற்பத்திற்கு விரதம் என்று பெயர். அந்த சங்கற்பம் சிறிதும் தளராமல் திடமாக இருக்கப் பெறுவது ஒரு சிறந்த குணம். ஏகாதசியன்று உபவாஸமிருத்தல் முதலியன உலகில் நம்போல்வார்க்கு விரதமெனப்படும். ஆனால் நாம் எதிலும் உறுதியுடையோமல்லோம். ஒரு பணியைத் தொடங்கும்போது அதில் மிகமிக உற்சாகங் கொண்டிருப்போம்; சிலநாள் கழிந்தவாறே அதில் தளர்ச்சியுண்டாகி மற்றொரு பணியில் கை வைப்போம். அதிலும் அப்படியேயாகும். ஆகவே, ஒன்றிலும் உறுதியில்லாதவர்கள் நாம். இராமபிரானே வென்னில் எதிலும் மிக்க வுறுதியுடையவன். இவ்வரிய பெரிய குணத்தை இங்கு நாம் விரிவாக அநுபவிக்க விரும்புகின்றோம்.

இராமன் எந்தக் காரியத்தில் திடமான விரதமுடையவன்? என்று கேள்விவரும். எல்லாக் காரியங்களிலுமே திண்ணமான ஊக்கமுடையவனாயினும், இராமன் முக்கியமாகக் கொண்டகாரியம் ஒன்றேயாகும். அதுதான் சரணாகதபரித்ராணமென்பது. பிராட்டியும் இராவணனை நோக்கி உபதேசம் செய்யுமிடத்து "விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல:" என்று கூறினளாதலால் அடைக்கலம் புகுந்தவர்களை அஞ்சலென்று கூறி அபயமளித்து அநிஷ்ட நிவ்ருத்திகளையும் இஷ்டப்ராப்திகளையும் செய்வித்துக் காத்தருள்வதே இராமனுக்கு இவ்வவதாரத்தில் மிக முக்கியமான காரியமாயிருந்ததென்று நன்குணரலாகிறது. ஸ்ரீ வேதாந்ததேசிகனும் அபயப்ரதானஸாரத்தின் முகப்பில் "நமஸ் தஸ்மை கஸ்மைசந பவது நிஷ்கிஞ்சந ஜநஸ்வயம்ரக்ஷா தீக்ஷா ஸமதிக ஸமிந்தாநயசஸே" என்றருளிச்செய்திருப்பது குறிக்கொள்ளத் தக்கது. அகிஞ்சநர்களான ப்ரபன்னர்களைத் தன் பேருகக் காத்தருளவதில் தீக்ஷைகொண்டு அதுவே பெரும்புகழாக விளங்குமவன் இராமபிரான என்பதுயேலெடுத்த சுலோகத்தின கருத்து. **"ஸர்வாவஸ்த ஸக்ருத்ப்ரபந்ந ஜநதா ஸம்ரக்ஷணைகவ்ரதீ"** என்று தசாவதார ஸ்தோத்ரத்திலருளி செய்திருப்பதும் காண்க. அடியார்களைக் காத்தருள்வதென்பது கிடக்கட்டும்; அதில் திடமான வுறுதியையுடையவன் இராமன் என்பதே இங்கு விஷயம். இதைப்பற்றி ஸ்ரீராமாயணத்தில் இரண்டிடங்களை முக்கியமாக எடுத்துக்கொள்வோம். ஆரணிய காண்டத்தில் 6, 9, 10

ஆகிய மூன்று ஸர்க்கங்களின் விஷயங்களை முதலில் நிரூபணம் செய்வோம். அங்கு ஆருவது ஸர்க்கத்திலுள்ள கதையாவது:

சரபங்கமுனிவரது ஆசரமஞ் சென்றிருந்த இராமபிரான் அம்முனிவர் சுவர்க்கஞ் சென்றபின் அங்குள்ள முனிவர்களால் இங்ஙனம் வேண்டப்பட்டான்; 'ராமா! நீ தேவேந்திரனைப்போல் இந்நிலவுலகுக்கெல்லாம் நாதனுயிருக்கின்றனை; சரபங்கமுனிவரை அனுக்கிரகித்த கீர்த்தியும் விராதனைக் கொன்ற வீரமும் உன்பால் சிறந்து விளங்குகின்றன. தந்தை சொற்பேணி அரசாட்சிப்பெருஞ் செல்வத்தை வெறுத்ததுமன்றி, பரதன்வந்து மிகமிக வேண்டினவிடத்தும் மனவூக்கம் குன்ருதிருக்கின்றனை; உன்பக்கல் தருமமும் சத்தியமும் தழைத்தோங்குகின்றன; சரணாகதரக்ஷகனை உன்னிடத்தில் ஒரு விண்ணப்பஞ் செய்கின்ருேம்; வருத்தம் தாங்கி நிற்கமுடியாமல் இது சொல்லுகின்ருேம்; இங்கு வந்திருப்பவர்கள் யாவரும் அந்தணர்களே; இவர்கட்கு நீ நாதனுயிருந்தும் அந்தோ! இவர்கள் அநாதர்கள்போல் மிக நலிவுறுகின்றனர்; இவர்களது தேகங்கள் அரக்கர்களால் அடிபட்டிருப்பதைக் காண்பாயாக; இங்ஙனம் வனத்தில் அரக்கர்கள் புரியும் நலிவுகளை நாங்கள் பொறுத்திருக்கவும் பரிஹரிக்கவும் வல்லமை அற்றிருக்கின்ருேம்; ராமா! இதற்காகவே நாங்களனைவரும் உன்னைச் சரணமடைகின்ருேம்—அரக்கர்களிடமிருந்து எங்களைக் காத்தருள்வாயாக' என்று.

இவ்வளவுங் கேட்ட இராமன் மிகவும் மனமிரங்கி அவர்களெல்லாரையும் நோக்கி 'முனிவர்காள்! எனக்கு நீங்கள் கட்டளையிடவேண்டுமேயல்லது என்பால் இங்ஙனம் வேண்டலாமோ? உங்களது கஷ்டங்களைத் தீர்ப்பது எனது சொந்தப் பிரயோஜனமாகும். தந்தை சொற்பேணுதலென்னும் வியாஜத்தினுல் உங்கள் காரியத்தை நிறைவேற்றுதற்கே இவண் யான் விடைகொண்டு இருக்கின்றேன்; உங்கட்கு இன்னல்விளைக்கின்ற அரக்கர்களையெல்லாம் நான் வதஞ்செய்தொழிப்பது திண்ணம்' என்று சொல்லி அவர்கட்கு அபயமளித்துச் சென்றனன்—என்பது ஆருவது ஸர்க்கத்திலுள்ள கதை.

பிறகு ஒன்பதாவது ஸர்க்கத்திற் கதையாவது,— பிராட்டி இராமனை நோக்கிச் சொல்லலுற்ருள்; "நாதா! உலகில் மூன்று தீய செயல்கள் மிகக் கொடியனவாகச் சொல்லப்படுகின்றன; பொய் சொல்லுதல், பிறர் மனைவியை வேட்டல், பகையின்றிப் பரஹிம்ஸை செய்தல் என்னுமிம்மூன்றும் மிகக் கொடிய செயல்களாம்; இவற்றுள் முதலிரண்டு செயல்களை நீர் நெஞ்சாலும் நினைக்கமாட்டீரென்பதை நன்கறிவேன்; நீர் சத்தியசந்தர், ஏகபத்தினி விரதமுடையீர்; ஆனல், மூன்ருவதான தீய செயல் இப்போது உம்மிடத்தில் இடம் பெறத் தொடங்கியிருப்பது மிகவருந்தத்தக்கது. நீர் முனிவர்களைக் காக்கவேண்டி அரக்கர்களனைவரையும் கொன்ருெழிப்பதாக வாக்குறுதியளித்தீர்; இதற்காகவே காட்டுக்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தீர்; இதுபற்றி நான் மிக வருந்துகிறேன். அரக்கர்கட்கும் உமக்கும் நேராகப் பகையொன்று படாதிருக்க அவர்களை நீர் கொல்ல விரும்புவதை நான் தருமமெனக் கொள்ளகில்லேன். முனிவர்கட்குத் தீங்கிழைக்கு மரக்கர்களைக் கொல்வது தருமமே யாகுமென்று நீர் கருதக்கூடும்; நீர்

ராஜ பதவியை வஹித்திருந்தால் அப்போது இது தருமமாகும்; க்ஷத்ரிய விருத்தியை விட்டுத் தாபஸ விருத்தியைக் கைப்பற்றி யிருக்கு முமக்கு இது தருமமாகுமோ? "ஆழிசூழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த் தாழிருஞ்சடைகள் தாங்கித்தாங்கருந்தவ மேற்கொண்டு பூழிவெங்கானநண்ணிப் புண்ணியபுனல்களாடிவா" வென்று நியமிக்கப்பட்டுக் கானகம் வந்திருக்கின்ற நீர் ஆயுதத்தைக் கையால் தொடுவதே உரியதன்று; அரண்யவாசத்திற்குத் தவம் புரிதலே தகுந்தது. ஆயுதம் தரிப்பதால் கோபமுண்டாகிப் பரஹிம்ஸை செய்ய நேரிட்டுப் பாபமே சம்பவிக்கும். தரும நெறியிலே விருப்பமுடைய நீர் தவவொழுக்கத்தை மேற்கொள்வதே நலம்; உமக்குத் தெரியாததொன்றில்லை; பெண்பிறந்த நான் உமக்குத் தரும முணர்த்துவதென்பது தகாததாயினும் உம்மீது இருக்குமன்பினால் தெரிவித்துக்கொண்டேன்; நீர் இதனைத் தம்பியோடும் நன்கு ஆலோசித்து இஷ்டமானபடி செய்வீராக"—என்று.

இனி பத்தாவது ஸர்க்கத்தில் பிராட்டிக்கு மறுமாற்ற முரைக்கின்ற இராகவன் சொன்ன சொற்களில் மிகவும் ஸாரமான வொரு ச்லோகத்தையே இங்கெடுத்துக் காட்டுவோம்; (ஆரண். 10—19.)

"அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம்வா ஸீதே ஸலக்ஷ்மணாம், ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத:"

ஆச்ரிதரக்ஷணத்தில் இராமபிரான் திடமான விரதமுடையவனென்பதை இந்த ச்லோகம் மிகநன்றாக எடுத்துக் காட்டுகின்றது. நம் போன்ற அகிஞ்சநர்கள் நிச்சலும் சிந்தை செய்யவேண்டிய சுலோகமிது. இந்த சுலோகத்தின் பொருளாவது: "ஸீதே! நான் என்னுயிரைவிட்டாலும் விடுவேன், உன்னையும் இலக்குமனையும் விட்டாலும் விடுவேன்; ஆனால், ஒருவருக்குப் பிரதிக்கினை செய்து கொடுத்து அதைத் தவறுவதென்பது முடியாது; அதிலும் பிராமணர்கட்குச் செய்த பிரதிக்கினையென்றால் எள்ளளவும் தவறமாட்டேன்" என்பதாம்.

இதற்குமேல் மற்றொரு ச்லோகமுமுள்ளது காண்மின்; [10—22.]

"ஸத்ருசம் சாநுரூபஞ்ச குலஸ்ய தவசாத்மந:,
ஸதர்மசாரிணீ மே த்வம் ப்ராணேப்யோபி கரீயஸீ."

"ஸீதே! நான் செய்ய நினைக்கும் தருமத்தையே நீயும் சங்கற்பிக்க வேண்டும்; வேறொன்றை நீ நினைக்கலாகாது; இப்படிப்பட்ட தருமத்தை அனுட்டிக்கத் துணைபுரிவதற்காகவே யன்றோ உன்னை நான் மணம் புரிந்துகொண்டேன்; ஆகவே என்னுயிர்க் காதலியான நீ என் வழியொழுகுவதே உற்றது"—என்னுங் கருத்து மேலெடுத்த சுலோகத்தி லுறையும்.

ஆக, இராமபிரான் ஆச்ரிதரக்ஷணத்தில் திடமான வுறுதி உடையவன் என்பது இக் கதாசந்தர்ப்பங்களினால் நன்கு விளங்கிற்று. மேல் யுத்தகாண்டத்தில் விபீஷணசரணாகதி ப்ரகரணத்திலுள்ள கதாசந்தர்ப்பத்தைக்கொண்டும் இதனை நன்கு நிலைநாட்டுவோம்.

இராவணனுடைய மந்திராலோசனைக் குழுவில் விபீடணன் அவனுக்குப் பலவாறு ஹிதோபதேசங்கள் செய்தும் பலிக்கக் காணாமையாலே இராமபிரானுடைய திருவடி நிழலிலே யொதுங்

கித் தான் வாழ்ந்துபோக நிச்சயித்துத் தன்னேடொத்த அன்புடைய நால்வருடன் கிளம்பிவந்து வானத்திலே நின்று வானர முதலிகளை நோக்கி, இராமபிரான் தன்னை அங்கீகரிக்குமாறு செய்யவேணுமென்று பெருமிடறுசெய்து ஓலமிட, அப்போது வானர வீரர்களில் சுக்கிரீவன் முதலானோர் இவனைச் சேர்த்துக் கொள்வது தகுதியற்றதென்று வலிதாக ஆக்ஷேபிக்க, அப்போது இராகவன் தனக்குள்ள ஆச்ரிதரக்ஷண பக்ஷபாதத்தையும் அதில் திடமான விரதத்தையும் எடுத்துரைக்குந் திறன் மிக வியக்கத் தக்கது. அதனை இங்குச் சிறிது விவரிப்போம்.

அடைக்கலம் புகுந்த இவ்விபீஷணன் தக்ககாலத்தில் வந்திலனென்றாவது நல்லெண்ணத்தோடு வந்திலனென்றாவது கைவிடத் தக்கவனல்லனென்பதைக் கூறத்தொடங்கின ராமன் இங்ஙனே கூறுகின்றான் ;—இராவணன் சீதையைக் கவர்ந்து சென்று பலநாள்களாகியும் முன்னமே நம்மிடம் வந்து சேராமல் நாம் எதிரியோடு போர்புரியத் தொடங்கு மிச்சமயத்தில் நம்மிடம் வந்து சேருமிவ்விபீடணன் நம்முடன் கலந்தவன்போனிருந்து நமது மருமங்களையெல்லா முணர்ந்துகொண்டு நம்மை வஞ்சனையாற் கொல்லுதற்காகத்தான் வந்தானே வென்று நீங்கள் கருதுவதற்கிடமில்லை. நன்மதி கூறித் தமையனை எப்படியாவது திருத்தலாமென்று இத்தனை நாளும் பலபடி முயன்று பார்த்தும் அது பலியாமற்போனதுமன்றி அவ்விராவணன் தன்னைக் கடிந்து கூறுதலுஞ் செய்யவே, இவன் தான் வாழவெண்ணியே நம்மிடம்வந்து சேர்ந்தனன் ; இவனை நான் ஒவிதத்திலும் கைவிடகில்லேன் ;

அடைக்கலம் புகுந்த விவனை அங்கீகரியாது கைவிட்டால் தான் நமக்கு நல்வாழ்வும் வெற்றியு முண்டாகுமென்று தேறினும் அஃது எனக்கு உடன்பாடன்று; சரணாகதனை விவனை அங்கிகரிப்பதனால் நமக்குத் தோல்வியே உண்டாவதானாலும், அதற்குமேல் மரணமே நேர்வதானாலும் அதுவே எனக்கு உடன்பாடாகும். நமக்கு வெகு நாளைப் பழக்கமில்லாமல் இப்பொழுது தான் புதியவனாக வந்தானென்றாவது மஹாபாதகி யென்றாவது குறை கூறி இவனை அங்கீகரியாது தள்ளிவிடுதலை ஒருகாலும் நான் மனத்திற் கொள்ளேன்; இவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் சரணமென்ற சொல்லைச் சொன்னதுவே காரணமாக, நெடுநாளைப் பழக்கமுள்ள நண்பன்போல விரும்பத்தக்கவனே யாவன். அங்கீகரிக்கப்பட்ட அவன் ஒருகால் நமக்குத் தீங்கிழைத்தானானாலும் அதனால், சரணாகதனுக்கு அபயமளித்தோ மென்னும் புகழ் நம்மை விட்டகலாது; ஆகவே, இவனை நான் கைவிடகில்லேன்;

அன்றியும், எங்கள் குலத்து இதிகாச மொன்று கேண்மின்; சிபி சக்ரவர்த்தி அரசாளுகையில் அவனது மேன்மைக் குணத்தைப் பரிசோதிக்கும்பொருட்டு இந்திரன் பெரும் பருந்தாகவும் யமன் சிறு புறாவாகவும் வடிவமெடுத்து அப்புறாவைப் பருந்து துரத்திவர, அது சக்ரவர்த்தியைச் சரணமடைய, அன்னான் அதற்கு அபயமளிக்க, பின்னே வந்த பருந்து 'என் இரையைக் கொடுத்திடு' என்று கேட்க, மன்னவன் 'அடைக்கலம் புகுந்தவரை ஆதரியாது விடுதல் அதிபாதகமாதலால் இதையன்றி எதைக் கேட்டாலுங் கொடுப்பேன்' என்ன, பருந்து 'இந்தப்

புருவின் எடையளவு தசையை 'உன் உடம்பினின்று அரிந்து கொடு' என்ன, வேந்தன் சம்மதித்து உடனே தனது உடம்பிலுள்ள உறுப்புக்களை யெல்லாம் ஒவ்வொன்ருக அறுத்து வைத்தும் எடை ஒவ்வாதது கண்டு தானே தராசுத்தட்டிலேறி எடையை நிறைக்க, உடனே அத்தேவர்கள் ப்ரத்யக்ஷமாகிச் சக்ரவர்த்தியை மிகக் கொண்டாடி அவனது உடம்பு முன்போல நிறைவுறும்படி வரமளித்துப் போயினரென்று கேட்டிருந்த துண்டு; அன்ன பெருமை வாய்ந்த சக்ரவர்த்தியின் வமிசத்திற் பிறந்த யான் இப்போது உங்களாலோசனையைக் கேட்டுச் சரணுகதனைக் கை விடுதல் தகுதியன்று; இவனைச் சேர்த்துக் கொள்வதனால் எவ்விதமான அனர்த்தம் விளைவதாயினும் அஃதெனக்குப் புகழாகுமே யன்றிப் பழியாகாதாதலால் இவனை நான் கைவிட மாட்டேன்;

ஒரு காட்டில் வேடனொருவன் ஒரு பெண்புருவைப்பிடித்துத் தனது கைக்கூட்டிலிட்டுக்கொண்டு திரிகையில் பெருமழை வந்து இருட்டிக்கொள்ள அப்போது அவ்வேடன் நடுக்கலெடுத்து ஒரு மரத்தின் சார்பில் வருந்திநிற்க, அச்சமயத்தில் அம்மரத்தின் மேலுள்ள ஆண்புரு தனது பெட்டையின் பிரிவையாற்ருது புலம்ப, அவ்வேடனது கைக்கூட்டில் அகப்பட்டிருந்த பெண்புரு அப்புலம்பலைக் கேட்டுவருந்தி 'இதோ நான் இவ்வேடனது கைக் கூட்டில் முற்பிறவியின் தீவினைப்பயனுகச் சிறைப்பட்டுக் கிடக்கிறேன்; இதற்காக நீ வருந்தவேண்டா; நமது இருப்பிடம் வந்து வருந்தி நிற்கிற இவ்வேடனுக்குக் குளிர் முதலாகிய துன்பத்தை நீக்கி உதவிபுரியவேணும்' என்றுகூற, அதுகேட்ட ஆண்புரு அவ்வேடனுக்கு மனப்பூருவமாக உபசாரஞ் செய்யவிரும்பி, கொள்ளியொன்றை யெடுத்துவந்து சருகுகளின் மேல்வைத்து மூட்டி வேடனைக் குளிர்காயுமாறு சொல்லி, பின்பு அவன் பசியால் வருந்துவதைப் பார்த்து 'அப்பா! நான் பறவையாயிருப்பதனால் உன்பசிக்கு ஏற்ற பொருள் என்னிடமில்லையே; துன்பத்திற்கு இடமாய் எதற்கும் உதவாமலிருக்கிற இவ்வுடலைக் கொண்டு உன் ஆத்மாவைத் திருப்திசெய்துகொள்' என்று சொல்லிக்கொண்டே மூண்டெரிகிற நெருப்பில் ஆனந்தத்தோடு விழுந்து அவனுக்கு உணவாகி முடிந்த தென்கிற கபோதோபாக்கியானம் சுருதிகளிலுள்ளது. ஓர் அற்பப் பிராணியாகிய புருவே தன்னிடம் வந்தடைந்தது காரணமாக, தன்மனைவியைக் கவர்ந்ததையும் பாராட்டாமல் தன்னையும் கவரக்கூடிய வேடனொருவனுக்கு உடலையுமுயிரையுங் கொடுத்து உதவிசெய்த தென்ருல், பேரறிவாளரென்று பேர்வைத்துக்கொண்டிருக்கிற நாம், நமக்கு யாதொரு தீங்குமிழைக்காமல் நம்மைச் சரணமென்றடைந்துள்ள விவனை 'ஒருகால் நமது உயிர்க்கு ஏதேனும் தீங்கு நேருமோ? என்று அஞ்சிக் காவாது கைவிடுதல் தகுதியோ? தகாது; இவனை எவ்வகையினும் கைவிடமாட்டேன்;

ஒருவன் செய்த நன்றியை மறந்த பாவியும், உண்மைப் பரம் பொருளான கடவுளை இல்லையென்று சாதிக்கின்ற நாஸ்திகனும் போலவே சரணமடைந்தாரைப் பாதுகாவாதவனும் நரகத்தில் நிச்சலும் வீழ்ந்து வருந்துவானென்பது நூற் கொள்கையாயிருக்க நானே இவனைக் கைவிடுவேன்? ஒருகாலும் கைவிடமாட்டேன்;

இராவணுதியரைக் கொல்வதாக நான் தேவர்கட்கு அபய மளித்தது இராவணன் சீதையைக் கவர்வானென்பதை முன்னமே அறிந்தன்று; நம்மைச் சரணமடைந்தாரைக்காப்பதே நமது கடமை என்ற கருத்திஞலேயே யாகும்; தண்டகாரணிய வாசிகளான முனிவர்களிடத்து "அடைக்கலம் புகுந்தவர்களைப் பாது காப்பதே எனது கடமை" என்று அப்போது சொல்லிவிட்டு, இப்போது அதற்குமாருக அபயம் வேண்டிவந்த இவ்விபீடணனைக் கைவிடுதல் எனக்கு உற்றதாகுமோ? ஆகாது; ஆதலால் இவனை நான் கைவிடகில்லேன்;

காட்டிலே திரியாநின்றவொரு வேடனைப் புலி துரத்திற்று. அவன் அதற்கு அஞ்சியோடிச்சென்று ஒரு மரத்தின் மீதேறிக் கொள்ள அங்கிருந்த வொரு பெருங்குரங்கு நல்வரவு கூறி ஆதரித்து வைத்துக்கொண்டது; மரத்தின் மீது ஏறமாட்டாத புலியானது மரத்தடியை விட்டுப்பெயராது நின்றது. நிற்கையில், அவ்வேடனது மடியில் கிடந்து உறங்கிப்போயிற்று குரங்கு; அப்போது புலி வேடனை நோக்கி 'இக்குரங்கை நீ கீழே தள்ளிவிடு, இதைக்கொண்டு என் பசியைத் தீர்த்துக்கொள்வேன்; உன்னை ஒன்றுஞ் செய்யாது விட்டிடுவேன்' என்று கூற, வேடன் அப்படியே குரங்கைக் கீழே தள்ளிவிட்டான்; புலியானது குரங்கை நோக்கி 'எனக்கு நரமாம்ஸத்தில்தான் அதிக விருப்பமுள்ளது; உன்னைக் கூற்றின்வாய் விழத்தள்ளின வேடனை எனக்கு நீ இரையாக்கி விடுவாயாகில் உனக்கு நான் உயிர்ப்பிச்சை தந்திடுவேன்' என்று சொல்ல, அக்குரங்கும் அங்ஙனமே செய்கிறேனென்றிசைந்து மரத்தின்மீதேறிற்று; வேடன் தன்னுயிர் தொலைந்ததாகவே திண்ணமாக வெண்ணி அஞ்சிநடுங்கிக்கிடந்தான்; குரங்கு அவனை நோக்கி 'அஞ்சேல் அஞ்சேல்!' என்று அபயமளித்து, புலியை நோக்கி 'என்னிடம் தேடிவந்தடைந்த சரணகதனை நானே விட்டிடுவேன்! விடுவேனென்று கனவிலும் நினையாதே' என்று சொல்லி வேடனைக் காப்பாற்றியதென்று கேட்டிருக்கிறோம்; அக்குரங்கிற்குள்ள மதிகூடவா நமக்கில்லாமற் போகவேண்டும்! ஒருகாலும் இவனை நான் கைவிடேன்;

என்றிப்படி பலபல சொல்லித்தன்உறுதியைவெளியிட்டனன் இராமபிரான். இப்பிரகரணத்தில் இராகவனுடைய அமுதமொழியாக வான்மீகி முனிவர் காட்டியுள்ள சுலோகங்களில் இரண்டு சுலோகங்கள் உயிரானவை. அவை கேண்மின்;

"மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந,
தோஷோயத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமே ததகர்ஹிதம்"
"ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே,
அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம"

என்னுமிவை ஸ்ரீராமசரமச்லோகங்களென்று குலாவப்படும். இராமபிரான் த்ருடவ்ரதன் என்பதை இவ்விரண்டு சுலோகங்களும் திடப்படுத்துவன. இவற்றுள் முந்தின சுலோகத்தில் நத்யஜேயம் கதஞ்சந என்பது உயிரானது; பிந்தின ச்லோகத்தில் 'ஏதத் வ்ரதம் மம' என்பது உயிரானது. இவ்விரண்டு சுலோகங்களினுடையவும் இன்சுவைப்பொருள்களை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

ஆக, இராமபிராமன அடைக்கலம் புகுந்தவர்களைக் காத் தருளுந் திறத்தில் திடமான விரதமுடையவ னென்பதை அப் பெருமானுடைய திருமுகப்பாசுரங்களினாலும் சரிதைகளினாலும் நிரூபித்தோமானோம்.

இனி சாரித்ரேண ச கோ யுக்த: ? என்னும் வினாவை அடுத்த இதழில் விவரிப்போம்.

வாழ்க்கைதீபம். 2 வை. மு. கோ.

எச்சில் படலம்.

எந்த ஒரு விஷயத்தைப் பெரியவர்கள் மிகவும் கிஷித்த மாக வைத்திருக்கிறார்களோ, அந்த விஷயத்தைத்தான் தற் கால நாகரீக விபரீதத்தின் போக்கினாலும் பெரியவர்களுடைய வார்த்தையில் நம்பிக்கையோ, பற்றுதலோ அற்ற நிலைமையி னாலும் மிக உயர்ந்ததாக எண்ணி அது கையாளப்பட்டு வரு கின்றது. சாஸ்திரம் என்கிற பெயரால் மட்டுமின்றி சுகா தாரத்தையும் முன்னிட்டுத்தான் பலபல காரியங்களை நம் முன்னோர் மிகத் தெளிவுடன் செய்துவைத்திருக்கிறார்கள். இந்த முறைகள் மக்கள் மனத்தில் நன்றாகப் படிவதற்காகவே சகல விஷயங்களிலும் பழமொழிகள் தோன்றி இருக்கிறதை நாம் ப்ரத்யட்சமாகக் காண்கிறோம். “எச்சில் இரக்கும்; தீட்டு துடைக்கும்” “எச்சிலுக்கஞ்சாதவர்கள் செய்கை பிச்சை எடுக்கப்புகும்” “எச்சில் பண்ணுகிறவர்கள் வாழ்வும் துச்ச மாய்ப் பேசுகிறவர்கள் வாழ்வும் என்றும் விடியாது” “எச்சில் நகத்தில் எரிநோய் தங்கும்” “நஞ்சுக்கும் மிஞ்சியது நாற்ற எச்சில்”...என்றெல்லாம் பழமொழிகள் அளவற்றுள்ளன.

ஆனால், அத்தகைய சிறந்த கருத்துடைய நல்லவிஷயங் களை கவனித்து நடக்கும் மனோபாவந்தான் மிகவும் தேய்ந்து விட்டது. மாணவமாணவிகள் சதா விரலைக் கடித்தவாறும், கையில் எதுகிடைத்தாலும் சரி, அதை வாயில் வைத்துக் கடிப்பதையே தாம் படிக்கும் விஷயத்தைவிட இன்பச் சுவை யென அநுபவிக்கிறார்கள்! மகா கனம் பொருந்திய சில பெரிய மனிதர்களும் பல மாணவர்களும் சதா வாயில் சிகரேட்டை வைத்து புகை இழுத்தவாறு பேசுவதுபோதாமல் அவர்கள் விரலையும் நகத்தையும் கடித்துச்செய்யும் சேஷ்டை. சகிக்கவில்லை! இச்செய்கை ஆசாரத்திற்கு அடாதது என்றது மட்டுமில்லை. சுகாதாரத்திற்கு மிகவும் கேடானது என்பதை யாரும் இல்லை என்றும மறுக்கமுடியாது.நாம் வாயிலேயே விரலை வைத்துப் பின் அதை எடுத்து முகர்ந்துபார்த்தால் அப்பப்ப! ...எத்தனை துர்நாற்றம்வீசிக் குடலைக் குமட்டுகிறது! இந்த வாயின் எச்சில் விஷத்திற்குச் சமமானது என்பதை முதலில் உணரவேண்டும். இரவில் படுக்கும்போது கொஞ்சம் அரிசியை வாயில் போட்டுக்கொண்டு படுத்து விடியற்காலையில் அதை உமிழ்ந்தால் அதைத் தின்னும் கோழியோ, காக்கையோ, வேறு எந்த சிறிய ஜந்துவோ செத்துப்போய்விடுகிறதாம்! இதை ஒருதகுந்த ஆராய்ச்சிக்காரர் கூறக் கேட்டிருக்கிறேன்.

குழந்தைகளை வாயருகில் முத்தமிடக்கூடாது...என்பது எச்சில் படாதிருப்பதற்கும் அதன் மூலம் வ்யாதிகள் வராதிருப்பதற்குமே யாகும். சில குழந்தைகளின்கன்னத்தில்முத்தமிட்டவர்களின் எச்சில் பட்டு எச்சில் தழும்பும் உண்டாகி உபத்திரவிப்பதை காளையும் ப்ரத்யட்சமாகக் காண்கிறோம். ஒரு குழந்தையை மற்றொரு குழந்தை கடித்துவிட்டால் உடனே பல்லின் விஷமும் எச்சிலின் விஷமும் கூடி புண்ணாகி விடுகிறது. குழந்தைகளின் எச்சிலே இப்படியாயின் பெரியவர்களின் எச்சிலுக்குக் கேட்கவேணுமா? எச்சிலையும் தீட்டையும் அடியோடு கவனியாதிருக்கிறவிடங்களில் ஸ்ரீதேவி அகன்று மூதேவி புகுந்து நாசமாக்குவதையும் நாம் காண்கிறோம். அம்மட்டுமின்றி பெருவாயின் முள்ளியார் என்கிற பெரியார் இயற்றியுள்ள ஆசாரக்கோவை என்ற நூலில் எச்சிலில் பலவகைப்பட்டவை இருப்பினும் பொதுவாக எச்சிலுடனே தீண்டத்தகாதவை, எச்சிலுடனே காணத்தகாதவை, எச்சிலுடனே செய்யத்தகாதவை...என்றென்று வரையறுத்துக் கூறுகிறார். பாடல்களைக் கவனியுங்கள்:

1. எச்சிலார் தீண்டார். பசுப்பார்ப்பார் தீத்தேவர்
   உச்சந்தலையோ டிவைஎன்ப யாவரும்
   திட்பத்தால் தீண்டாப் பொருள்.
2. எச்சிலார் நோக்கார் புலைத்திங்கள் நாய் நாயி
   றத்தக வீழ்மீனே டிவ்வைந்தும் தெற்றென
   நன்கறிவார் நாளும் விரைந்து.

இப்படி இன்னும் சில பாடல்களும் உண்டு.

பசு, ப்ராம்மணன், நெருப்பு, தேவதைகள், உச்சந்தலை இவைகளை எச்சிலுடனே தீண்டக்கூடாது.

எச்சிலுடன் புலையன், சந்திரன், நாய், சூரியன், எரிநக்ஷத்திரம் முதலியவைகளைக் கண்ணால் காணக்கூடாது என்கிறார். இன்னும் சில பாடல்களால் மிகவும் கண்டிதமாகச் சொல்கிறார்...எச்சிலுடன் படிக்கவோ, எழுதவோ, வாயினால் எதையும் சொல்லவோ ஒன்றும் கூடாது என்கிறார்.

பல்லிடுக்கில் புகுந்ததை விலக்க எச்சில்செய்தாலும் கையை உடனே அலம்பிவிடுவது முறையும் ஆசாரமும் சேர்ந்ததாகும். டம்ப்ளரில் உள்ள பானத்தைச் சூப்பிக் குடிப்பது மிகவும் தவறு. அப்படிக் குடித்தாலும் அதில் மற்றொருவர் குடிக்காமல் உடனே அலம்பிவிடுவது எத்தனையோ உயர்வாகும். நமக்குத் தெரிந்தவரையில் கூடுமான முறையில் எச்சில் செய்வதைத் தவிர்த்து பெரியாரின் வாக்கை வழிபட்டு நடந்தால் பாபமூட்டையைச் சுமக்காமல் சுகவாழ்வு வாழலாம். ஸரஸ்வதியின் அம்சமானவைகளே சகல புத்தகங்களும் சங்கீதக் கருவிகளும் ஆகும். சதா எச்சில் செய்தபடியே இவைகளைத் தொட்டு உபயோகிப்பது எவ்வளவு கேவலமானது என்பதை ஒரு சிறிதாவது சிந்தித்துப்பார்க்கவேண்டாமா?

5

நாராயணன் தம்பித்துநிற்பதையும் பாக்யலக்ஷ்மி அப்படியே கதிகலங்கிநிற்பதையும் பாக்யத்தின் கணவர் அப்போதுதான் பார்த்ததால் விவரம் புரியாமல் விழித்தார். "பாக்யம்! ஏன் இப்படி ஒரு மாதிரியாய் நிற்கிறாய்? வேதகிரி என்பவன் யாரு? உனக்கு முன்பே தெரியுமா?" என்று தனது வாய்குழறல் பாஷையில் கேட்டார்.

பாக்யத்தின் மனம் குழம்பித் தவிக்கின்ற அதிர்ச்சியுடன் ...“ஸ்வாமி! இவனைப் பார்த்த உடனேயே என் கதியே கலங்கிவிட்டது. சுமார் 25 வருஷங்களுக்குமுன்பு உங்களுடைய சிறிய தாயார் பெண்ணை ஒருவன் மணக்க வந்ததும், பிறகு தீர விசாரித்ததில் அந்தப் பையன் ஏதோ ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டுக் காவலில் இருந்து பிறகு எத்தனையோ பொய் ஜோடனைகளினால் அவன் அதில் சம்பந்தப்படவில்லை என்று சாதித்து விடுதலையடைந்ததாயும் தெரிந்து அவனுக்குக் கொடுக்கக்கூடாதென்று கல்யாணம் நின்று விட்டதும், அதனால் அவனுடைய பிதா சண்டைபோட்டு உங்கள் சிறிய தகப்பனாரின் கன்னத்தில் அடித்ததும், அந்த அதிர்ச்சியில் அவர் காது செவிடாகிவிட்டதும், பிறகு அந்தப் பெண்ணை யார்வந்து விவாகத்திற்குக் கேட்டாலும் அந்தப்பாவிகள் அபாண்ட புளுகுமூட்டையை அவிழ்த்துக் கொட்டி பிள்ளை வீட்டாரைக் கலக்கி விவாகமே ஆகாதபடி செய்துவிட்டதும் அந்த விசனமும் அவமானமும் தாங்காது அந்தப் பெண் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டதும், உங்களுக்கு நினைவிருக்கிறதா? அதே சேஷகிரிதான் இப்போது பெயரை மாற்றி வேதகிரி என்று வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கொலை பாதகனின் முகத்தைப் பார்த்தவுடனேயே எனக்கு சந்தேகம் உண்டாகியது. பிறகுதான் நினைவு வந்தது...

அதோடு சில வருஷங்களுக்குமுன்பு நான் வேலை செய்து வந்த வீட்டு எஜமானியின் தம்பிபெண்ணை யாரோ ஏமாற்றிக் கெடுத்துவிட்டதாயும் அந்தப் பெண் ஓடிவிட்டதாயும் சொன்னேனே, நினைவு இருக்கிறதா! அதே பெண் இந்த காரில் ஸிகரேட் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் என் கதிகலங்கிவிட்டது. இத்தகைய மகா அயோக்யனிடமா நம் சாதுக் குழந்தை பழகும்படி விதி அமைந்தது?...என்பதை நினைத்து நான் துடிக்கிறேன்...

இத்தகைய கொடும்பாவிகள் இப்போது என் கண்முன்பு ஒரு பழக்கூடைக்காரியை ஏமாற்றிக் கொள்ளையடிப்பது போல் கூடைபழத்தையும் வாரிக்கொட்டிக்கொண்டு கூடையை வீசி எறிந்துவிட்டுச் சென்றார்கள். ஏதோ பெரிய கலகம் நம் வீட்டு வாசலில்நடக்கப்போகிறது என்று பயந்தேன். மந்திர சக்தியால் மயங்கியவள் போலும் தடைகட்டிய நாகம் போலும் அந்தக் கிழவி பெருமூச்சுகூடவிடாமல் தானே சென்று கூடையை எடுத்துக்கொண்டு பல்லை இளித்து ஒரு தரம் நின்று பார்த்துவிட்டுப் போனதானது எனக்கு இன்னதென்று புரியவே இல்லை. ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருக்கிறது. கூச்சலிட்டு சண்டைபோட்டால் எங்கே அடித்தும் கொன்றும்விடுவானே என்று பயந்துகொண்டுதான் பேசாமல்

போய்விட்டாளோ! இவர்கள் கொலைக்கும் அஞ்சாத பாவி களென்று ஏற்கெனவே தெரியுமோ?... அல்லது என்ன காரணமோ!...எல்லாம் விசித்திரமாகவன்றோ இருக்கிறது''

என்றதைக் கேட்டு தந்தையும் மகனும் வியப்புற்றார்கள். பாவம்! உள்ளத்தில் கொந்தளிப்பதைத் தான் எடுத்துக் கூறச் சக்தியற்றவராகிவிட்டதால் அவர் “எது எப்படியானால் நமக்கென்ன? நம் குழந்தைவரையில் பகவான் ஒன்றும் விபத்து வராது காப்பாற்றினால் போதும்'' என்று ஜாடை யிலும் குழறல் வார்த்தையிலும் சொல்லித் தேற்றினார்.

“எல்லாம் வாஸ்தவந்தான்! ஆதிவிஷயத்தை இவன் மறக் காது நினைவு வைத்திருந்து அந்த சம்மந்தப்பட்ட மனிதர் களைச் சேர்ந்தவன்தான் நாராயணன் என்று ஒருவேளை தெரிந்துவிட்டதால் அதனால் என்ன நடக்குமோ? அதோடு அந்தக்காலத்தில் விவாக சம்மந்தமாக சண்டை வந்தபோது நீங்கள்தான் அதிகமாய் இதைக் கண்டித்து ஆக்ஷேபித்து மார்தட்டிப் போர் புரிந்தீர்கள். அப்போது வாய் சரியாக இருந்தது. உங்கள்மீதுதான் அவர்களுக்கு அதிக கோபமும் அகங்காரமும் பொங்கியது. அந்தக் காரத்தை வைத்துக் கொண்டு உங்கள் மகன்தான் இவன் என்று தெரிந்துதான் பழகிக் கழுத்தை முறிக்க உறவாடுகிறானா? அல்லது தெரியா மல் உறவாடுகிறானா? எதுவும் புரியவில்லையே! மனத்திற்கு நிம்மதியற்ற கலக்கமல்லவோ வந்துவிட்டது! இவன் இன்னா னென்று தெரியாமலிருந்தால் போதுமே''...

என்று கூறி முடிக்கும் முன்பு நாராயணன் தாயாரின் விசனத்தின் எல்லையை அறிந்து மனங் குழம்பியவாறு “அம்மா! நம்மைப் படைத்த ஆண்டவன் நம்மைக் காக்க சதா காத்துக்கொண்டிருக்கையில் நாமேன் கவலைப்படவேண்டும்? ...என்று என்னைச் சமாதானப்படுத்திய நீயாம்மா இப்படிக் கவலைப்படுகிறாய்? அம்மா! அந்த ஆண்டவன் இப்போது நம்மைக் கைவிட்டுவிடுவானா? இதோ பாரம்மா! நான் இந்த வேலையை இன்றே விட்டுவிடுகிறேன். வேறு எங்காவது நான் வேலை சம்பாதித்துக்கொள்கிறேன். இந்த மனிதனின் சம்மந் தமே அப்போது விட்டுவிடுமல்லவா? நீ கவலைப்படாதேம்மா; மரம்வைத்தவன் தண்ணீர் வார்ப்பான் என்கிற நம்பிக்கையை நாம் கைவிடவில்லை. இந்த விபரீதங்கள் தெரியாமல் அதில் காலை வைத்துவிட்டபிறகு இனி அதிலிருந்து நிவர்த்திக்கும் வழியையல்லவா நாம் பார்க்கவேண்டும். இன்றே நான் ராஜி நாமாச் செய்துவிடுகிறேனம்மா! வேறு எங்காவது 50 ரூபா யில் வேலை கிடைத்தாலும் போதும்......

என்று கூறுகையில் அவன் பிதா அதைத் தடுத்து... “தம்பீ! அவசரப்பட்டுப் பேசிவிடாதே; பதறிய காரியம் சிதறி

விடும் என்பது பழமொழி...இதோ இந்தப் பக்கத்தைப் படித்துப் பார்" என்று கூறி ஒரு புத்தகத்தைக் காட்டினார்.

"மனிதா! கோபுரத்தை பொம்மை தாங்குகிறது என்றால் எத்தனை பொருத்தமாகுமோ! அதுபோலத்தான் மனிதனும் தனது சுயப்ரயத்தனத்தினால் சகலத்தையும் சாதித்து விடலாம் என்று நினைப்பதுமாகும். மனிதனால் ஒரு சிறிய அணுவைக்கூட அசைக்கவும் முடியாது. அணுப்ரமாணமான காரியத்தைச் செய்து சாதிக்கவும் முடியாது. மணிக்குள் ஒலியும்,மலருக்குள் மணமும்,சரீரத்திற்குள் ஆத்மாவும்,விளக்கிற்குள் ஜோதியும், கல்லினுள் தேரையும், பழத்திற்குள் இனிப்பும், கருப்பைக்குள் சிசுவும் எப்படி கண்ணிற்குப் படாமலும், கண்டுபிடிக்கமுடியாமலும் கூடவே ஐக்யமாகி ஆனால் மறைந்து நமக்கு வியப்பூட்டுகிறதோ! இத்தகைய மாயத்தை ச்ருஷ்டித்துள்ள மாயவன் சகல வஸ்துக்களிலும், சகல இடங்களிலும் மறைந்து சர்வவ்யாபியாய் அங்கிங்கெனாதபடி ஆனந்தரூபியாய்ப் பரவி இருக்கும் பரம ரகஸியத்தை மக்கள் மறந்துவிடுகிறார்கள். ஸூத்ரதாரி ஆட்டாமல் பொம்மை யாடுவதில்லை. அதுபோல் சர்வரக்ஷகனாகிய பகவானின் சக்தியும் அவனுடைய நாம ப்ரபாவமும் துணையில்லையேல் நாம் வெறும் தூசிக்குச் சமமாகவோ சவமாகவோ—ஆகிவிடுகிறோம். எப்படித்தான் நாம் விழுந்துவிழுந்து ப்ரயத்தனப்பட்டாலும் அது நடக்காது—ஏன்?...தன்னைத் தானே காத்துக்கொள்ளும் ரக்ஷணசக்தி நம்மிடம் இருப்பதாக நாம் நினைத்து நாம் செய்யும் வரையில் பகவான் என்ன நினைக்கிறான்: 'அவனை அவனே காத்துக்கொள்ளட்டும். நம்மை அவன் நாடவில்லை. தான் தன்னை ரக்ஷிக்கமுடியாது என்ற நிலைமையை அறிவுறுத்திப் பின் நாம் கைகொடுப்போம் என்று நினைக்கிறான்; நினைத்துச் செய்தும் காட்டியிருக்கிறான். உபமானமாய்ப் பாருங்கள்: த்ரௌபதி மானபங்க காலத்தில் தன் கைகளால் சேலையைப் பிடித்துக்கொண்டு இருந்தவரையில் புடவை சுரந்ததா! இருகையும்விட்டேனே த்ரௌபதியைப்போலே என்கிற வாக்யம் எப்படி உண்டாயிற்று? கஜேந்திரன் முதலையின் கடி தாளாமல் காலை அது வெளியில் இழுக்க முதலை உள்ளே இழுக்க, இப்படிப் போராடிய பிறகு காலை இழுப்பதை நிறுத்திய உடனே ஆதிமூலமே என்ற தீனக்குரலைக் கேட்டு பகவான் ஓடிவந்தான். கருடன் "நான்தான் மிகச் சிறந்த சக்திவாய்ந்தவன்; சர்வ லோக பிதாவாகிய பகவானையே நாம் சுமந்து செல்கிறோம்" என்று கர்வப்பட்டதை யறிந்த பகவான் கருடனைப் பரீக்ஷிக்கக்கருதி, "கருடாழ்வாரே! இந்த விரலைச் சற்று தூக்கிவிடும்" என்றார். விரலை அசைக்கவே முடியாது இருப்பதை அறிந்த கருடன் கர்வபங்கமடைந்தான். தன் முயற்சியினாலோ தன்

கர்வத்தினுலோ சாதித்துவிட முடியும் என்று நினைப்பது முற்றிலும் படுதோல்வியே அளிக்கும். அவனன்றி ஓர் அணுவும் அசையாது: இதை நாம் அறிந்து உத்தம முறையில் வாழ்வதற்காகத்தான் பலபல சரித்திரங்கள் நமக்கு உதாரணமாக உதயமாகியிருக்கின்றன.

பகவத்கீதையிலும் பகவான் என்ன சொல்கிருன் "உன்னுடையது, உன் ப்ரயத்தனம், உன் உறவு, உன் மனிதர்கள், நீ செய்வது என்றது ஒன்றுமே கிடையாது. சகலத்திலும் நான்தான் இருந்து நடத்துகிறேன். நீ செய்யவேண்டிய கடமையைச் செய்து விடு; பலாபலனைக் கொடுக்க நான் இருக்கிறேன். நான் இல்லாத இடத்தையோ, என் சக்தியில்லாத விஷயத்தையோ, செயல்களைபோ நீ பார்க்கவே முடியாது. இதை நீ முதலில் தெரிந்துகொள்"...என்றுதான் கூறுகிருன். ஆகையினுல் உன்னுல் சகலமும் சாதித்துவிட முடியும் என்ற எண்ணமே உன் காரியத்திற்கு நாசமாக அமையும். எம்பெருமானைத் துணைகொண்டு செய்பவர்களுக்கு ஜெயமும் மங்களமும் உண்டாகும். எம்பெருமானை நினையாது நடப்பவர்களுக்கு அபஜெயமும் காரியத்தில் படுதோல்வியும் உண்டாகும்...

என்ற வரையில் உள்ளதைப் படித்ததும் நாராயணனின் உள்ளம் ஒருவகையாய்த் தத்தளித்தது. தான் என்ன செய்வது என்பதே தோன்ருது மவுனமானுன். பாக்யலக்ஷ்மியின் மனத்தில் மிகுதியான பீதிகள் உண்டாகி வதைக்கத் துடங்கின. வேலையை விட்டுவிட்டால் சாப்பாட்டிற்கு என்ன செய்வது? அல்லது தனக்காகத்தான் வேலையை விட்டுவிட்டான் என்பதை அந்த முரடன் உணர்ந்தால் அதையே வ்யாஜமாக வைத்துக்கொண்டு இன்னும் வேறு விதமாக உபத்திரவம் செய்தால் என்ன செய்வது? ஆபீஸில் இருந்தால் அது எந்த விதமான சிக்கலில் உபத்திரவத்தில் கொண்டுவிடுமோ! எந்த வழியில் செல்வது? என்ன செய்வது?...என்று மிகவும் நடுங்கி உள்ளம் தவித்தது. பழக்காரி அத்தனை பழத்தையும் பறிகொடுத்துவிட்டுச் சிரித்துக்கொண்டேபோனதுதான் அவளுக்குப் பெரும் வியப்பாகவும் மர்மமாகவும் தோன்றியது.

6

மறுநாள்காலை வழக்கம்போல் நாராயணன் ஆபீஸுக்குச் சென்ருன். எந்த ஒரு விஷயத்திலும் மனத்தில் களங்கமும் கல்மஷமும் சந்தேகமும் உண்டாவதற்கு முன்பு ஒரு உணர்ச்சி; உண்டாகிய பிறகு ஒருவித உணர்ச்சி உண்டாவது உலகத்தில் சகஜம். அதேபோல் நாராயணனுக்கு இது பரியந்தம் தான் உத்யோகத்தில் வெகு விரைவில் வெற்றியுடன் முன்னேறிவிடவேண்டும். எல்லோரிடமும் அன்பாகப் பழகி சிநேகிதனுக

நல்லபெயரெடுக்கவேண்டும். பரீக்ஷைகளில் தேறி புகழுடைய வேண்டும். உத்யோக உயர்வுக்கு யார் யார் முக்யமோ அவர்களிடம் மிகவும்பணிவாயுழைத்துப்பழகி அன்பைப்பெற்றுப் பெருமையும் பதவியும் அடைந்து தன் பெற்றோர்களை மகிழச்செய்யவேண்டும்...என்கிற ஒரே எண்ணத்துடன் பழகி வந்தவனுக்கு இன்று ஆபீஸுக்குள் நுழையும்போதே ஏதோ மாதிரியான வித்யாஸ உணர்ச்சி உண்டாகி அந்தச் சாயலின் ரேகை முகத்திலும் படிந்திருந்தது.

வேதகிரியின் ஆபீஸ்ரூமில்தான் நாராயணனும் அமர்ந்து வேலை செய்யவேண்டியது வழக்கம். வேதகிரியைப்பற்றி தன் தாயார் மூலம் தெரிந்துகொண்ட பயங்கர விஷயமும், அவனே நேரில் கண்ணால் பார்த்த கிராதக சம்பவமும் அவன் நெஞ்சில் பலமாகப் போராடி வதைப்பதால் தினம் இருக்கும் சிரிப்பும் சாந்தமும் முகத்தில் மறைந்து வேறு விதமாகக் காணப்பட்டதை அவனே உணராமலில்லை. நேற்று தன்னை அழைத்தும் தான் வராமலிருந்ததால் அதற்காகக் கோபிப்பாரோ என்ற பயமும் கூடவே ஊசலாடிக்கொண்டிருந்தது.

அந்த உணர்ச்சிகளோடு உள்ளே வந்தான். இவனே ஆச்சரியப்படும்படியாக வேதகிரி உட்காரும் ஆஸனம் காலியாக இருந்தது கண்டு விவரம் புரியாமல் ப்ரமித்தான். ஒரு வேளை மேலதிகாரியிடம் போயிருக்கிறாரோ என்னும் எண்ணம் உண்டாகியதும் பழய பயம் மீண்டும் தலை தூக்கி மார்பு படபட வென்று அடித்துக்கொள்ளத் தொடங்கியது. சற்று நிதானித்துப் பின்பு ஆஸனத்தில் அமர்ந்தான். தினம் க்ரமமாகச் செய்கிற வேலையாயினும் இன்றுமட்டும் ஏதோ ஒரு புதிய திகிலுடன் சற்றுத் தடுமாறுவதுபோல் தோன்றியது.

தன் பிதா தனக்குப் பரமகுருவாக விருந்து அவ்வப்போது மனம் சோர்ந்த காலையில் அமைதியை அளித்து நிம்மதியை உண்டாக்கும் முறையில் போதித்துவரும் உயர்ந்த உபதேசங்களை எண்ணியதோடு இந்த பயத்தை உண்டாக்கிய கடவுளே இதைப் போக்கி ரக்ஷிக்கவேண்டுமென்று மனதாரப்ரார்த்தனை செய்தான். தான் மிகவும் யோக்யன், உண்மையான பெரிய மனிதன் என்று எண்ணி மதித்து வந்த மனிதன் இத்தகைய துராத்மாவா?...என்று எண்ணும்போது தேகம் ஒரு முறை நடுங்கியது.

அச் சமயம் வேதகிரிக்கு உடம்பு சரியில்லாததால் அவன் ஒருவாரம் லீவு போட்டிருக்கிறான் என்றும் பதிலுக்கு வேறு அதிகாரி அந்த வேலைகளைப் பார்க்க வருவதாயும் தகவல் கிடைத்ததும் உண்மையில் நாராயணனுக்குச் சற்று பெரிய மூச்சு வந்து ஒரு துளி பயம் குறைந்தது எனலாம். அதற்கு மேல் வேலையும் சற்று நன்றாகவே ஓடியது. வேறு எத்தகைய விசேஷமும் இன்றி வேலைகள் முடிந்ததும் வீட்டிற்குப் புறப்

படும்போது இவனுடைய மேலதிகாரி இவனைக் கூப்பிடுவதாய் ஒரு சேவகன் அழைத்தான்.

ஏதோ கவலையற்று நிம்மதியாய் இருப்பதாக எண்ணி யிருந்த உணர்ச்சிக்கு சடக்கென்று ஒரு அதிர்ச்சியும் பயமும் உண்டாகி நடுக்கியது!...எதற்காகத் தன்னைக் கூப்பிட வேண்டும்? இதுவரையில் ஒருநாளும் கூப்பிட்டறியாததாலும் வேதகிரியின் விஷயம் தெரிந்ததாலும் 'என்ன அனர்த்தமோ!' என்றுதான் தோன்றிக் கலக்கியது. இதுவரையில் எந்த விஷயத்தையும் எஜமானர் கடித மூலமாகவும் அல்லது தன் கிழேயுள்ள க்ளார்க்கு மூலமாயுந்தான் தெரிவிப்பாரேயன்றி கூப்பிட்டதில்லை. ஆதலால் பயம் அதிகரித்துச் சில வினாடிகள் தலை சுற்றலுடன் நின்றான். பிறகு மெல்லச் சமாளித்துக் கொண்டு எஜமானர் ரூமுக்குச் சென்று வணங்கி மரியாதை யாய் நின்றான்.

எஜமானர் ஏற இறங்க ஒரு முறை பார்த்தார். இவனது நடுக்கலையும் முகத்தில் அதிர்ச்சிக்களை சொட்டுவதையும் பார்த்ததும் எஜமானர் ஒருவாறு உதட்டைக் கடித்தபடி "அப்படி உட்காரு! சென்றவாரம் ஏதாவதொரு சம்பவம் நடந்ததா?"...என்று அணுகுண்டை வீசி எறிவதுபோல் சொல்வதைக்கேட்டு பாவம்! நாராயணன் நின்ற இடத்தி லேயே அப்படியே தட்டாமாலை சுற்றுவதுபோன்ற சங்கடம் உண்டாகி கால்களை கெட்டியாகத் தரையில் ஊன்றிக்கொண்டு மேஜையைக் கைகளால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நின்றான்...நடுங்கும் குரலில் "சார்! ஒரு சம்பவமும் நடக்க வில்லையே! எனக்கொன்றுமே தெரியாதே"...என்று குழறிய வாறு கூறினான்.

எஜமா:—நாராயணா! நன்றாக யோசனைசெய்து சொல்லு நீ ஒரு திருடன் என்பதை இன்றுதான் ஸ்பஷ்டமாக அறிந் தேன்...என்ற வார்த்தைகள் முடிவதற்குள் நாராயணனின் தலைமீது வானமே இடிந்து விழுந்ததுபோல் அயோமயமான நிலைமை உண்டாகிவிட்டது. தலையை இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "ஸார்! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! இதென்ன வார்த்தை? நான் திருடனா?" என்று நடுநடுங்கியவாறு கேட்டான்.

எஜமா:—ஆம்; நீ திருடன்தான்! நன்றாக யோசித்துப் பாரு; சென்ற வாரம் நிகழ்ந்த சம்பவம் ஒன்று போதும்...

நாரா:—சென்ற வாரம ஒருசம்பவமும நடக்கவில்லையே... என்னை என்னமோ செய்கிறதே...ஸார்! சத்யமாக எனக்கு...

எஜ:—(இடைமறித்து) "நாராயணா! கையும் மெய்யு மாய் நடந்த விஷயத்திற்கு சத்யமென்ன? ப்ரமாணமென்ன? சென்ற வாரம் ஒன்றுமே நடக்கவில்லையா? அதையாவது சொல்லு"...

நாரா:—ஒன்றுமே இல்லை, ஸார்!...என் வேலையுண்டு நான் உண்டு...என்றுதான் போகிறேன்...

எஜ:—உன் வேலையைப்பற்றி யாரும் கேட்கவில்லை. சென்ற வாரம் நீ ஆபீஸிலிருந்து திரும்பிப் போகும்போது பிள்ளையார் கோயில் தெருவில் என்ன நடந்தது...

இதைக் கேட்ட நாராயணனின் துடிதுடிக்கும் தடுமாற்றம் சற்று குறைந்து படபடப்பும் சிறிது அடங்கி ஆச்வாஸப்படுத்திக்கொண்டு...“அதுவா!...யாரோ ஒரு குழந்தையைத் திருடன் கொண்டுபோய் நகைகளைக் கழற்றிக் கொண்டு கண்காணாத இடத்தில் விட்டுவிட்டானும்! குழந்தை அழுதுகொண்டிருந்தது; கூட்டம் வேடிக்கை பார்ப்பதும் வம்பு பேசுவதுமாகச் சென்றுகொண்டிருந்தார்கள்...

குழந்தை பரிதாபமாய் அழுவதைப் பார்த்து மனது கேளாமல் நான் அதைத் தூக்கிக்கொண்டு வீடுவீடாய்த் தெருத்தெருவாய் அலைந்து பின் போலீஸ் ஸ்டேஷனில் தெரிவித்தேன். அது மிகவும் சிறிய குழந்தையாகையால் வீட்டை அடையாளம் சொல்லத் தெரியவில்லை...அதனிடம் வார்த்தை கொடுத்துக்கொண்டே வீட்டை அடையாளங் கண்டுபிடித்து நானே வீட்டில் விட்டுவிட்டு வந்தேன். இதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. அந்த நகைகள் களவு போனதை நான் எந்த விதத்திலும் அறியமாட்டேன். இந்த வீண் அபவாதப் பழியை யார் என்மீது புகுத்தியிருப்பார்கள்?...

எஜ:—யாரும் ஒருவிதமான பழியையும் உன்மீது புகுத்தவில்லை. நீ சாதாரண நகைகளைத் திருடவில்லை. அந்த குழந்தை என் ஆப்த சிநேகிதரின் குழந்தை. அவருக்கு நீ வயிற்றில் பாலை வார்த்ததோடு அவர் உள்ளத்தையும் கூடவே திருடிவிட்டாயாம். அந்தத் திருட்டுக்கு தண்டனை அவருடைய மகளை உனக்குக் கொடுத்து பொன் விலங்குமஞ்சள் கலங்கும் பூட்டி ஆட்டவேண்டுமாம். என்ன சொல்கிறாய்?...

என்றதைக் கேட்டு நாராயணன் மிக்க லஜ்ஜையடைந்து தலை குனிந்தான். மீண்டும் எஜமானர் தொடர்ந்து பேசத் தொடங்கி “நாராயணா! நேற்றுதான் என் சிநேகிதர் என்னை நேரில் சந்தித்து சகல விவரமும் கூறி உன்னைப்பற்றி விசாரித்தார். அவருடைய அபிப்ராயத்தை எடுத்துக் கூறி இதை முடித்துவைக்கும்படி க்கேட்டுக்கொண்டார். அதனால் உன்னைத் தமாஷ்செய்து கேட்டேன். வருந்தாதே! நீ உன் பெற்றோரிடம் கேட்டு நாளையதினம் காலையில் வந்து சொல்லு. மேல்கொண்டு உடனே முடிக்கலாம். நான் இந்த டிபார்ட்டுமெண்டில் இருக்கும்வரையில் உனக்கு எத்தனை நன்மைகள் செய்யமுடியுமோ செய்கிறேன். வேலையில் உயர்வுக்கு வேண்டியதைச் செய்கிறேன். என் சிநேகிதர் மிகவும் நல்லவர், பரம்பரையாய் யோக்யமான குடும்பத்தைச் சேர்ந்

தவர். சரியான ஜோடி என்றுதான் நினைக்கிறேன். பெண்ணை நான் பார்த்ததில்லை. நீ என்னிடம் பழகும் மாதிரிக்கும் உன் புத்திசாலித்தனத்திற்கும் நான் மெச்சியே இதை சிபார்சு செய்கிறேன். உன் பெற்றோரிடம் ஆழ்ந்து யோசித்து நாளை பதில் சொல்லு'' என்று மிகவும் உத்ஸாகத்துடன் சொன்னார்.

இதைக் கேட்ட நாராயணனுக்கு என்னபதில் சொல்வதென்றே தெரியவில்லை. அவன் கல்யாண விஷயத்தைப்பற்றி இதுவரையில் அவன் சிந்தித்ததுகூட கிடையாது. அவன் உயர்தரப் படிப்பு படிக்கும்போதே காலேஜில் பலர் இவனை வேட்டையாட முன்வந்தார்கள். நாராயணன் அந்த விஷயங்களுக்குப் பதில்கொடுக்காமல் மறுத்ததோடு தானுகக் காலணு சம்பாதித்து குடும்பத்தை ரக்ஷிக்கும் சக்தி உண்டானாலன்றி தான் கல்யாணமே செய்துகொள்ளப்போவதில்லை... என்று தட்டிக்கழித்தே வந்தான். இப்போது தனது எஜமானருக்கு பதில் சொல்லத் தெரியாது விழித்து நிற்பதைக் கண்ட எஜமானர் ''நாராயணு! என்னயோசனை செய்கிருய் என்னுடைய சினேகிதன் என்றால் யாரோ அனுமதேயம்! விலாஸமில்லாத பேர்வழி என்று எண்ணி யோசிக்கிருயா? அம்மாதிரி யோசிப்பதும் சகஜந்தான். அதையும் நான் வரவேற்கிறேன். நீ மாமனுராக அடையப்போகிறவர் வேறுயாருமில்லை; உன்னுடைய டிபார்ட்டுமெண்டில் உள்ள ஸ்ரீ வேதகிரியின் சொந்த சகோதரியினுடைய கணவர்தான். வேதகிரியின் மருமாள் தான் உன் சகதர்மிணியாக வேணுமென்று நான் சிபார்சு செய்கிறேன்'' என்று கூறியதைக் கேட்டஉடனே நின்ற இடத்திலிருந்தே ஒரு முழஉயரம் தூக்கிப்போட்டதுபோல் நடுங்கினுன்...

இத்தனை நேரம் எஜமானர் சொல்லியபோது தன் தாயாரின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காகவும் தாயாருக்குச் சற்று உதவிபுரிந்து ஓய்வு கொடுக்கும் முறைக்கும் விவாக விஷயத்தைத் தன் பெற்றோர்களிடம் சொல்லலாம்! எஜமானரின் தயவு இருந்தால்தான் காரியமும் மேலேமேலே வ்ருத்தியடையும் என்று தனக்குள் எண்ணமிடுவதற்குள் வேதரியின் சொந்தம் என்கிற விஷயத்தைக் கேட்டதும் தீயை மிதித்தவன்போல் துள்ளினுன். வேதகிரியின் விஷயத்தில் எஜமானர் பூர்ண நம்பிக்கையுடன் இருப்பதை அவர்வார்த்தையே எடுத்துக்காட்டிவிட்டதால் வேதகிரியைப் பற்றிய உண்மையைத்தான் சொல்வதுகூட பெருங்குற்றமாகிவிடுமோ என்கிற பயத்தினுல் சொல்லவும் நடுங்கினுன். எஜமானர் என்ன எண்ணுவாரோ என்ற பயமும் போராடியது. ... மையில் மெல்லச் சமாளித்துக்கொண்டு ... ''... என்னை மன்னிக்கவேண்டும். விவாகமே நான் இன்னும் சில காலத்திற்குச்

183169

செய்துகொள்ளப்போவதில்லை. அதோடு விவாக விஷயத்தைப் பொறுத்த பொறுப்பு என் பெற்றோரைச் சார்ந்தது. அவர்கள் இஷ்டம்போல் நடக்கும். நான் போய்வருகிறேன்.'' என்று கிளம்பும் சமயம் எஜமானர் சற்று கனத்த குரலில் ''நாராயணா, நில்லு! அவசரப்படாதே; நீ என்ன கல்யாணமே செய்துகொள்ளாமல் ப்ரம்மசாரியாயிருக்கப்போகிறாயா!... தாயார் தகப்பனார் இஷ்டப்பட்டுப் பண்ணுவது நியாயந்தான். எனினும் நீ இஷ்டப்படாத பெண்ணை அவர்கள் செய்து வைத்தால் நீ சம்மதித்துவிடுவாயா? விவாகம் என்கிறது வெறும் பொம்மை விளையாட்டல்ல என்பதை நீ உணரவில்லை. நீ மனத்திற்கு த்ருப்தியான பெண்ணைப் பார்த்து மணந்தால் தான் இல்வாழ்க்கை ருசிக்குமேயன்றி இதற்கெல்லாம் பெற்றோரை நீ எதிர்பார்ப்பது சரியில்லை. நாளை காலைவரையில் 'டயம்' தருகிறேன். இதுபற்றி எனக்குச் சரியான த்ருப்தி யான பதில் சொல்லவேண்டும்...போய் வா!'' என்றுதானேமுன் கூட்டிப் பதில் சொல்லிவிட்டுதடதடவென்றுசென்றுவிட்டார்.

நாராயணனுக்கு இது ஏதோ பெரிய சோதனை என்று தோன்றியதேயன்றி நன்மையாகவோ! மனத்ருப்தியாகவோ தோன்றவில்லை. பயம் வேறு நடுக்கியது.

7

தன் மகன் ஆபீஸுக்குச் சென்றபிறகு பாக்யத்திற்கு அவனைப் பற்றிய கவலையே மனத்தைப் பாதித்துக்கொண் டிருந்ததால் தான் முக்யமாகச் சில இடங்களுக்குப் போக வேண்டிய காரியங்களில்கூட அவள் மனது நாடவில்லை. வேதகிரியினால் தன் மகனுக்கு எத்தகைய கெடுதியும் வரா திருக்கவேண்டுமே என்று பகவானைத் தோத்திரம் செய்த வாறு இருந்தாள்.

ஆதியில் தன் கணவனுக்கு உடல் நலம் குன்றி வாய் போய்விட்டபிறகு வேலைக்குப்போக சக்தியற்று குடும்பம் எத்தகைய ஆதரவுமின்றித் தத்தளித்த சமயம் பாக்கியத் தின் பரிதாபத்தைத் கண்டு நாகம்மாள் என்கிற ஒரு பெண் மணி பாக்யத்திற்குத் தன் தோட்டத்திலேயே ஒரு சிறு குடிசையை அமைத்துக்கொடுத்து அவர்களை அதில் இருக்க உதவிப் பின் தன் சினேகிதிகள் வீட்டில் பத்துத் தேய்க்கவும் வெந்நீர் பாத்திரங்கள் தேய்த்துத் தண்ணீர் நிரப்பி ஸ்நான தினங்களில் குழந்தைகளுக்கு ஸ்நானம் செய்விக்கவும் இது போல் சிலசில வேலைகளின் மூலம் முதல்முதல் உதவிசெய்த நாகம்மாளின் வாத்ஸல்யத்தினால்தான் பாக்கியத்தின் குடும் பம் இன்று இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது என்கிற நன்றியை பாக்கியம் நித்திரையில்கூட மறப்பதே இல்லை.

எத்தனை கஷ்டமான வேலைகள் இருந்தபோதிலும் நாகம் மாளைப் பார்க்காமல் வரவேமட்டாள்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்கிற திருக்குறளின் அதியத்புதமான வேத வாக்யத்தை அவள் மறக்கவே இல்லை. நாகம்மாள் அன்று தனக்கு உதவி புரியாதிருப்பாளேயானால் தன் கதி என்னவாகி யிருக்கும்! உற்றார் உறவினர்களின் எதிரில் செல்லவும் அஞ்சி மகத்தான துன்பங்களையும் பட்டினியையும் அமைதியுடன் அனுபவித்து வந்த புனிதவதிக்குத் தன் துன்பத்தை யறிந்து பகவான் தான் உதவி புரிய முன்வந்து நாகம்மாளை யனுப்பினான் என்ற அளவுகடந்த ப்ரீதியை பாக்கியம் தன்னிடம்கொண்டிருப்பது நாகம்மாளுக்கு நன்றாகத் தெரியும். எப்படியாவது ஏழை பிழைத்து வாழ்ந்துபோகட்டும் என்று அவள் சந்தோஷத்துடன் தன்னாலான உதவியை என்றும் செய்துவருகிறாள்.

இன்று பாக்யத்திற்குள்ள மனக் குழப்பத்தில் நாகம்மாள் வீட்டிற்குப் போகக்கூட மனது வரவில்லை. இத்தகைய கொடிய துஷ்டனிடமா நம் குழந்தை வேலை செய்கிறான் ...என்று நினைக்கும்போது திடும்திடும் என்று தூக்கிப் போட்டுக் கலக்கிக்கொண்டிருந்தது.

நாகம்மாள் வயதில் மிகப் பெரியவள். இப்போதெல்லாம் நடமாட்டமே யின்றி படுக்கையுடன் கிடக்கும் நிலைமையை அடைந்துவிட்டாள். அவளைவிட ஒரே வயதுதான் அவளுடைய கணவருக்கு வயது வித்யாஸம். ஆனால், அவர் மிகவும் தாருட்யமாய் நடமாடிக்கொண்டிருக்கிறார். நாகம் மாள் சுமார் 14 மக்களைப் பெற்ற பெரிய சம்சாரி. போனது போக மிச்சமுள்ள அவளுடைய குடும்பத்தின் தொகையை எண்ணினால் கொள்ளுப்பேரன் எள்ளுப் பேரன் முதல் சம்மந்தி வகையராக்கள் வரையில் நூற்றுக் கணக்கில் கூட்டத்தைக் காணலாம். "நாகம்மாள் வீட்டு விசேஷங்களுக்கு அவளுடைய வயிற்று வழியாக உண்டாகிய கூட்டமே வீடு நிறைந்துவிடும். பிறரை அழைக்க வசதி ஏது!" என்று ஊரார் சொல்வார்கள். அத்தகைய மகா பாக்யசாலியான நாகம்மாள் பாக்யத்திற்கு உதவிசெய்ததுபோல் இன்னும் சிலருக்கும் செய்துதான் இருக்கிறாள். ஆனால், உதவிபெற்றவர்களில் சிலர் நன்றியே இல்லாமல் மனஸ்தாபத்துடன் கூடப் பிரிந்து பகைவர்கள் போலவும் ஆகிவிட்டார்கள்.

பாக்கியம் என்றும் ஒரே சீராக இருப்பதைக் கண்டு நாகம்மாளுக்கு அவளிடம் அலாதி ப்ரீதியும் நம்பிக்கையும் இருந்துவருகிறது. நாகம்மாள் கூப்பிடுவதாக வேலைக்காரி வந்து பாக்கியத்தை அழைத்தாள். "நான் நாகம்மாமி வீட்டிற்குப் போய்வருகிறேன். நீங்கள் பையன் வந்தால்

விசாரித்து அவனை இங்கேயே இருக்கச்சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

ஒரு வாரமாக நாகம்மாளுக்கு உடம்பு அதிகம். படுத்திருக்கிறாள் என்பது பாக்யம் அறிந்த விஷயமாகையினால் எப்படி இருக்கிறதோ! என்னமோ! என்று கலக்கத்துடன் சென்றாள். நாகம்மாள் பாக்யத்தை அன்புடன் வரவேற்றுத் தன் பக்கத்தில் உட்காரவைத்துக் கைகளைப் பிடித்துக் கொண்டு "பாக்கியம்! நீ இத்தனை நேரம் வரவில்லையே என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். நான் பத்து பேருடன் பெரிய குடும்பத்தில் பிறந்தேன். பகவான் எனக்

கும் சளைக்காத சந்தானத்தைக் கொடுத்திருக்கிறான். அந்த சந்தோஷமே எனக்குப்போதும். இந்தமட்டும் கடவுள் கருணையினால் இந்த நிமிஷம் நான் இருக்கும் நிலைமையில் என்னைத் தன்னடியில் சேர்த்துக்கொண்டால் அதுவே போதும். என் மனதார நான் இதுவரையில் யாருக்கும் தீங்கு செய்ததில்லை. கூடுமானவரையில் என் காலம் முடியவும் இப்படியே நன்மைகளையே செய்துவிட்டுப்போகவே நான் ஆசைப்படுகிறேன். அதைக் கெடுக்கும் முறையில் இதோ ஒரு கடிதம் வந்திருக்கிறது. இதை உனக்குக் காட்டவே நான் உன்னை இத்தனை அவசரமாக அழைத்தேன். இந்தா! இதை நீயே படித்துப் பாரு; உரக்கவே படி; நானும் மறுபடியும் கேட்கிறேன்'' என்று கூறிக் கடிதத்தைக் கொடுத்தாள். வியப்புடன் பாக்யம் படிக்க ஆரம்பித்தாள்.

அன்புள்ள அம்மாவுக்கு நமஸ்காரம். உபயகுசலம்.

இதற்கு முன்பு நான் இரண்டு கடிதங்கள் எழுதியதற்குச் சரியான பதிலே வராததால் இதை மிகவும் விவரமாக எழுதுகிறேன். நீயோ படுத்தபடுக்கையாகிவிட்டாய். இனி எழுந்து பழயபடி நடப்பது துர்லபம் என்று டாக்டர்கள் சொல்வதாக வேறு அப்பா எழுதியிருக்கிறார். உன் ஒரே வயிற்றில் பிறந்த நாங்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமான நிலைமையில் இருக்கிறோம். அதது அவரவர்களுடைய அதிர்ஷ்டம் என்று வேறு பல்லவி பாடுகிறாய். என்னை நீ கல்யாணம் செய்துகொடுக்கையில் ஏராளமான செல்வம் இருந்தது உண்மைதான். ஆனால், அதன் சிதைவுக்குக் காரணமே தெரியாமல் இந்த சமயம் கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டதை நீ பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாய். கல்யாணத்திற்கு முன்பு சரியானபடி ஜாதகத்தைப் பார்த்து நீ செய்திருந்தால் இந்த கதி எனக்கு வருமா? பணக்காரன் தரித்திரனாகிவிட்டால் அதைவிட 'கஷ்டம் அவமானம் வேறு என்ன வேணும்! இந்த ஜாதகனின் செல்வம் நிலைத்ததா! இல்லையா! என்பதைப் பார்க்காமல் நீங்கள் செய்துவிட்ட காரியத்தினால் நான் இப்போது மிகவும் கஷ்டப்படுகிறேன். ஆதியில் நீ இம்மாதிரி செய்துவிட்டதற்கு ப்ரதியாக நீயே ஆதரிக்கவேண்டாமா! நீயும் வாயைப் பிளந்துவிட்டால் நான் என்னசெய்வதாம்? அண்ணன் மகனுக்கும் என் பெண் ஏற்கவில்லை. கால் சற்று இளம்பிள்ளை வாயுவால் இழுத்திருப்பது ஒரு பெரிய ஊனமாம்! அதற்கு நீயே தாளம் போட்டு எழுதிவிட்டாய். அந்தப்பெண்ணுக்கு விவாகமாகாமல் மற்ற பெண்களுக்கு எப்படி ஆவது? படிக்க வைக்கவோ விவாகமில்லாது வைக்கவோ எனக்கு சக்தி உண்டா? இதுதான் நான்

கடைசி கடிதம் எழுதுகிறேன். உன்னால் ஆதிமுதல் முன்னுக்குவந்த பாக்கியத்தம்மாளின் மகனுக்கு நீ இந்த கல்யாணத்தை நடத்திவைக்கவேண்டும். அவள் பத்து தேய்க்கவும் சமயல் செய்யவும் உழைக்கும் வேலைக்காரியானாலும் பாதகமில்லை என்று என்மகளைக் கொடுக்கிறேன். பையன் ஏதோ சம்பாதிக்கிறான் என்கிற ஒரு நன்மை இருக்கிறது. வேலைக்காரியின் மகனுக்கு கால் சற்று ஊனமான பெண்ணானால் பாதகமில்லை. இந்த ஏற்பாட்டை நீ கட்டாயம் செய்துவைத்துக் கல்யாணத்தை சங்கிரகமாய் அங்கேயே உன் செலவில் செய்துவிடு. நீ இறந்தபிறகு கன்யாதானம் என்று ஒரு ரூபாயை ஒருவருக்குக் கொடுப்பதைவிட நீ படுக்கையிலிருக்கையில் உன் பேத்திக்குக் கடைசியாக இதைச் செய்துவிட்டு நீ நிம்மதியாகக் கண்ணை மூடு. இக்கடிதத்தைத் தந்தியாய்ப் பாவித்து உடனே பதில் எழுது. இதற்கும் பேசாமல் இருந்துவிடாதே

அம்மா! நெருப்பு என்றால் வாய் சுட்டுவிடாது. எப்படியும் உனக்கு வயதாகிவிட்டது. ஏதோ நன்றாக வாழ்கிறாய். நாங்களெல்லாம் நன்றாக இருக்கையில் நீ சுமங்கலியாய்ப் போனால் எத்தனையோ உயர்வுதான். மேலும் நீ படுத்துமிருப்பதால் ஏதோ உன்னுடம்பிலுள்ள நகைகளில் பொறுக்காக இருப்பதை தயவு செய்து இப்போதே—நீ உயிருடன் இருக்கும்போதே எனக்குக் கொடுத்துவிடு. அப்பா உன் பெயரால் பண்ணியுள்ள இன்ஷியூரென்ஸ் பணத்தில் இப்போதே எனக்கும் உன் பேத்தியின் கல்யாணத்திற்கும் எழுதிவைத்துவிடு. பிறகு நான் வருந்தும்படி வைக்காதே. உடனே பதில். உன்னால் இன்னமும் பிழைக்கும் பாக்கியம் இந்த உதவியைச் செய்யட்டும். நன்றி இல்லாதுபோகவேண்டாம்...எங்க எஜமானர் நேரே போய்ப்பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறார். நீயும் சொல்லு. இங்ஙனம், உன் மகள்.

இதைப் படிக்கும் பாக்கியத்தின் வியப்பு எல்லை கடந்தது. கடிதம் எழுதியுள்ள லக்ஷணத்தை எண்ணி எண்ணி வியப்புடன் நாகம்மாவைப் பார்த்தாள். நாகம்மாள் நிறைந்த இதயத்தையுடைய மனுஷியாதலால் “பாக்கியம்! என்ன பார்க்கிறாய்? எந்த ஒரு சிறிய அம்சத்திலும் சாமர்த்தியம், சாதுர்யம், முன்பின் யோசிக்கும் கூர்மையான புத்தி முதலியவைகள் இருந்தால்தான் வசீகரமாகப்பேசவோ, கச்சிதமாய் செய்யவோ முடியும். என் வயத்தில் பிறந்த மகள்தான். நான் என்ன செய்வேன்? இத்தனை அசடாய்க் கடிதம் எழுதும் அவள் செய்கை எப்படி இருக்கும்? உன்னை நான் எதற்கு அவசரமாக அழைத்தேன் என்றால்...

என்று நாகம்மாள் சொல்லும் வார்த்தைகள் பாக்கியத்தின் காதில் விழவே இல்லை. தன் மகன் ஆபீஸில் அந்தமுரடனிடம் அகப்பட்டு இன்று எந்த நிலைமையில் வரப்போகிறானோ? என்கிற ஏக்கத்தில் தவிக்கும்போது இக்கடிதத்தின் வாசகம் வேறு அம்புபோல் பாய்ந்து நெஞ்சைப் பின்னும் அள்ளுகிறது. என்ன அகம்பாவமான வாசகம்! ...சமயல்காரியின் மகனுக்கு நொண்டிப் பெண் போதும்... என்றல்லவா எழுதிருக்கிறாள். உண்மையில் இப்போது என்னுடைய நிலைமை தர்மசங்கடமாகிவிட்டதே. இந்த மகாலக்ஷ்மியினால் என் குடும்பம் முன்னுக்கு வந்திருப்பது என்னவோ உண்மை. அதை நான் நினைக்காவிடில் கண் அவிந்து ஒருவாய் தண்ணீர்கூட அகப்படாமல் போய்விடும். இருந்துஇருந்து ஒரு மாணிக்கத்தை பகவான் நமக்குக் கொடுத்திருக்கையில் அதற்கு ஒரு நொண்டிப் பெண்ணையா மணம் செய்விக்கும் விதியமையும்! ஐயோ! நினைக்கும் போதே பயமாயிருக்கிறதே! இந்தப் பேராபத்தை பகவான் தடுத்துக் காப்பாரா? என்ன விருந்தாலும் நாகம்மாள் தன் மகளுக்காக வேண்டி இந்த காரியத்தைச் செய்யும்படிக் கேட்டால் நான் என்ன சொல்வது? 'அனாதரவாய் நீ தவிக்கையில் நான் உதவி செய்தேனல்லவா? அதை எண்ணி நீ இந்தப்ரதி உதவியைச் செய்யவேண்டும்' என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது?...என்று அபாரமான குழப்பத்தில் மூழ்கித் தவிக்கையில் அவளுடைய தத்தளிப்பைக் கண்ட நாகம்மாள் "பாக்யம்! உன்னுடைய மனத்துடிப்பைக் கண்ணாடிபோல் நான் பார்க்கிறேன். உனது உணர்ச்சி பூராவையும் நான் உணர்ந்து அனுபவிக்கிறேன். பாக்யம்! என் பெண்ணின் விருப்பப்படிக்கு நீ என் பேத்தியை—நொண்டிப் பெண்ணை—கட்டாயம் கல்யாணம் செய்துகொள்ளும்படியாய் நான் கேட்பேனோ என்று உன்னுடைய நரம்பு ஒவ்வொன்றிலும் அந்த வேகம் துடித்து உனது உணர்ச்சிக் கனலைத் தூண்டுகிறது. இதோ பாரு, பாக்கியம்! நான் அப்படி உன்னை சொப்பனத்தில்கூட கேட்கவேமாட்டேன். இது சத்தியம். அவள் தான் புத்தியில்லாது எழுதியிருந்தால் நான்கூட அப்படியே செய்வேனா? உனக்கு. இருக்கும் ஒரே மாணிக்கத்திற்குத் தகுந்த சிறந்த இடமாகப் பார்த்துக் கல்யாணத்தைச்செய்து நீ இன்புறவேண்டுமென்று நான் இதய பூர்ணமாக ஆசைப் பட்டு வேண்டுகிறேன். நீ கவலைப் படாதே...

உன்னை நான் எதற்காக வரவழைத்தேன் என்றால் என் மருமகன் அங்கு நேரே வருவதாக எழுதியிருக்கிறானே! அந்த அசடு நேரே உன் வீட்டிற்கு வந்து ஏதாவது கேட்டு உன் மனத்தை நோகவைத்துவிடப்போகிறதே என்பதற்காகவே நான் முதலில் உனக்கு விஷயத்தைச் சொல்லி அதற்குத் தக்க

படி நடந்துகொள்ளும் விவரத்தையும் தெரிவிக்கவே இப்போது அழைத்தேன். நான் நிறைந்தசம்ஸாரி என்பது நீ அறியாததில்லை. ஆகையால் நான் உனக்கு ஹிதத்தையே சொல்லி இந்த காரியத்தை நிறுத்தவே தீர்மானித்துவிட்டேன்.

என்று அந்தம்மாள் உண்மை உணர்ச்சியுடன் அன்பாய்க் கூறியதைக் கேட்டதும் பாக்யத்தின் ஆனந்தம் எல்லை கடந்து பொங்கித்தெறித்தவேகத்தில் நாகம்மாளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு தனது மனக் கொக்தளிப்பை எடுத்துக் காட்டினுள். நாகம்மாளும் ஆனந்தத்துடன் "பாக்யம்! நான் சொல்கிறேனே என்று கோபிக்காதே. பகவான் செயல் ஒன்று இருக்கிறது. அதை நாம் என்னதான் பாடுபட்டாலும் தடுக்கமுடியாது. இருப்பினும் முதல்முதல் கண்ணுல் கண்டு ஊனமுள்ள பெண்ணை மணம் செய்ய சம்மதிக்க யாரும் இசையமாட்டார்கள். உன் கணவனைப்போல் நடுவில் ஊனம் ஏற்பட்டுவிடுமாயின் அதைக் கர்மம், விதி என்று கூறி வா வேற்றுவிடுகிருேம். ஏற்கெனவே நீ மனம் நொந்து பரிபவப் பட்டிருப்பதை யறிந்தும் நானும்கூட இம்மாதிரி செய்யத் துணிந்தால் என்னை மிருகம் என்றுதான் சொல்ல வேண்டும். இதோ பாரு, பாக்யம்! உன்னிடம் என் மருமகப் பிள்ளை வந்தால் நீ என்ன சொல்லவேண்டும் தெரியுமா? 'ஸ்வாமி! நாகம்மாளால் வ்ருத்தியாய் வளரும் பயிராகிய எங்கள் குடும்பத்தினுல் உபகாரம் செய்தவர்களுக்கு அபகாரம் செய்து நாசமாக்க நான் விரும்பவில்லை. என் பையனின் கெட்ட ஜாதகத்தின் ரகஸியம் தெரிந்து நான் அந்தம்மாளின் சம்மந்தம் செய்தவுடனே அந்தம்மாளின் மகளும் மருமகனும் இறந்து அவர்களுக்கு மகத்தான துக்கத்தை உண்டாக்கி அதை நான் எப்படி சகிப்பேன்! உபகாரம் செய்து அன்ன மிட்ட கைக்கு நான் பின்னம் விளைவிக்கலாமா! ஜாதகம் அத்தனை கோளாறுனது. ஏதோ, எப்படியோ, யாரோ முன்பின் தெரியாத பெண்ணை நாங்கள் விவாகம் செய்தால் அதனுல் எத்தகைய கெடுதிகள் வந்தாலும் அது வேறு வழி யாகிவிடும். மனத்திற்குத் தெரிந்து இக்காரியம் செய்தால் அது தெய்வத்திற்கும் பொறுக்காது. அந்தம்மாளுக்கு நான் இத் தகைய தீமையைச் செய்யத்துணியமாட்டேன் என்று தைரிய மாகச் சொல்லிவிடு. அதோடு நானும் இன்றே இந்த விஷயத்தையே கடிதம் எழுதிவிடுகிறேன். அதோடு இந்தப் படலம் முடிவடையும் என்று நினைக்கிறேன்... என்ன பாக்யம்! நான் சொல்வது சரிதானே?" என்ருள்.

பாக்யத்தின் உள்ளம் குளிர்ந்தது. சுயநலமற்றுப் பிறர் நலத்திற்காகவே உழைக்கும் இந்தம்மாளின் குணத்தழகை யும் தாராள சிந்தையையும் கண்டு பூரித்தாள். "பாக்யம்! நீ வீட்டிற்குப் போய்வா! நான் இன்னும் அதிகநாள் இருக்க

மாட்டேன். என் காலம் வரையில் நீ அடிக்கடி வந்துபோய்க் கொண்டிரு. பிறகு அந்தக் கவலையே உனக்கு வேண்டாம். ஏதோ கடவுள் கிருபையில் நல்ல பெண்ணைப் பார்த்து நாராயணனுக்கு விவாகத்தைச் செய்துவைத்து ஒரு மாமும் பெருந்தோப்பாகி குளுகுளு வென்று நீ மகிழ்ந்தால் போதும். போய் வாம்மா" என்றாள்.

பாக்யத்திற்கு எத்தனைக்கெத்தனை சந்தோஷமும் இந்த பெரிய கண்டத்திலிருந்து தப்பிய ஆனந்தமும் இருப்பினும், இத்தனை உதவி செய்த ஒரு குடும்பத்தினருக்கு நாம் ப்ரதி உதவி செய்யாவிட்டால் அது ஒரு வேளை தெய்வக் குற்றமாகி விடுமோ! என்கிற ஒரு தாக்குதல் திடீரென்று தாக்கிவதைக் கத்தொடங்கியது; எனினும், தெரிந்து ஒரு நொண்டியைத் தன் மகனுக்குச் செய்துவைக்க மனம் எப்படித் துணியும்? அந்த உத்தமப் பையன்தான் எப்படி ஏற்று வாழ்க்கை நடத்துவான்? என்கிற ஒரு விசாரம் கூடவே தோன்றி வாட்டத் தொடங்கியது.

அதை வெளியில் சொல்லவும் உண்மையில் மனம் துணிய வில்லை. தர்மசங்கடமானநிலைமையில் தத்தளித்தவாறுமுதலில் வீட்டிற்குச்சென்று விஷயத்தைத் தன் கணவனிடம் சொல்லி அவருடைய யோசனைப்படிச் செய்யலாம்...ஆபீஸுக்குச் சென்ற மகனின் நிலைமை எப்படி இருக்கிறதோ அதையும் பார்த்துப் பின் செய்யலாம்...என்ற தீர்மானத்துடன் விடை பெற்றுக்கொண்டு சென்றாள். நிம்மதியற்ற அவள் நெஞ்சம் பெரும் சூறாவளியில் சிதறித் தவித்தது.

8

பாக்யலட்சுமி மனது உடைந்துபோய் எண்ணாததும் எண்ணியவளாய் ஒருபுறம் தள்ளாடியவாறு தன்நினைவற்ற முறையில் வீதியில் நடக்கையில் தான் போகவேண்டிய வழியைக்கூடத் தவறி வேறு வழியில் திரும்பிவிட்டாள். தனக்கு மிகவும் நிராதரவான நிலைமையில் மகோபகாரம் செய்த அம்மாளின் குடும்பத்திற்குச் சமயத்தில் உதவி செய்ய வில்லையே என்கிற ஒரு ஆத்திரத்தினால் நாகம்மாளின் மருமகப்பிள்ளை ஏதாவது த்வேஷங்கொண்டு விபரீதத்தைச் செய்துவிடுவானோ! என்று நினைக்கையில் அதொருபுறம் மூளையைக் கலக்குகிறது.

நாகம்மாள் மனத்தில் ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் இதைப்பற்றிக் குற்றமாக நினைப்பாளோ! அந்த நினைப்பு என் குழந்தையைத் தாக்குமோ! என்று நினைக்கும் போது 'கபீர்' என்கிறது. ஆபிஸுக்குச் சென்ற மகனுடைய

நிலைமை எப்படி இருக்கிறதோ! என்ன ஸ்திதியில் எப்படி வரப் போகிருளோ என்ற கவலையொருபுறம் பலமாகத் தாக்குகிறது. ஆபீஸுக்கே நேரே போய்விடுவோமா! என்றும் தோன்று கிறது: ஆனல், ஆபீஸ் உள்ள இடம் தெரியாது. தான் தன்னந்தனியாக எங்குச் செல்லமுடியும்? எதற்காக பகவான் திடீரென்று எங்கள் அமைதியைக் குலைத்து அளப்பரிய கலக்கத்தையும் மனவேதனையையும் கொடுத்துவிட்டார்; இதுவும் நான் செய்தபாவந்தான். இதற்குப் பகவான்மீது ஏன் குறைகூறவேண்டும்—என்றுபலவிதமான எண்ணமிட்டவாறே நடந்ததால், வழி தவறி வெகுதூரம் போய்விட்டாள்.

எதிரில் ஆண்களும் பெண்களும் கூட்டங்கூட்டமாய் பேசிக்கொண்டே இவளை இடித்துக்கொண்டு சென்றபிறகு தான்சற்று நினைவுபெற்றுத் திடுக்கிட்டு நின்றுபார்த்தாள். இதென்ன வீதி? இதெந்த இடம்? எல்லாம் புதிதாக இருக் கிறதே! நாம் வழிதவறிவந்துவிட்டோமா? இத்தனை கூட்டம் எங்கிருந்து போகிருர்கள்? அல்லது எங்குப் போகிருர்கள்? என்று சற்று திகைத்து நின்ருள்.

வீதியில் போகும் கும்பலைப்பார்த்து, "அம்மணீ! இதென்ன பேட்டை? இங்கு கோயிலில் ஏதாவது திருவிழா நடக்கிறதா? எங்கு இத்தகைய கூட்டம் செல்கிறது?" என்று நிதானமாகக் கேட்டாள். தலைக்கிறுக்குப் பிடித்த சிலர் சரியாகவே பதில் சொல்லாமல் சென்ருர்கள். சிலர் "நாங்களும் அங்குதான் போகிருேம். போனல் தானே தெரி கிறது. இது திருமால்புரம் என்ற இடமாம்" என்ருர்கள்.

மற்ருெருத்தி "இங்கு திருமாலின் கோயில் இருக்கிற தாம். அந்தக் கோயிலுக்கு எதிரில் ஒரு பூந்தோட்டமிருக் கிறதாம். அந்தப் பூந்தோட்டத்தில் யாரோ யாத்திரா வாஸிகள் வந்திருக்கிருர்களாம். அந்த யாத்திரா வாஸி களில் 5 வயது குழந்தையொன்று வந்திருக்கிறதாம். அந்தக் குழந்தை பார்ப்பதற்கு மிகவும் ராஜவடிவாய் அபூர்வ வசீ கரத்துடனிருக்கிறதாம். அந்தக் குழந்தை ஆச்சரியமாய் ஜோஸியம் சொல்கிறதாம். தான் முன் ஜென்மத்தில் பிறந் திருந்த விஷயங்களை எல்லாம் அப்படியே சொல்கிறதாம். குறிகேட்கப்போகிறவர்களுக்கும்முன்ஜென்மத்தின்விஷயத்தை அப்படியே ஊர், பெயர் முதலிய அடையாளங்களுடன் சொல்கிறதாம்! அவரவர்கள் ஆங்காங்கு போய் விசாரித்தால் நூத்துக்கு நூறு உண்மையாகவே இருப்பதால் அந்த யாத்ரீ கர்களுக்கு வேண்டிய சகல சவுகரியங்களையும் பேட்டை வாசிகள் செய்துகொடுத்ததோடு இங்குள்ள ஜனங்களும் பக்கத்து வட்டாரங்களிலுள்ள ஜனங்களும் இந்த தெய்வக் குழந்தையை தரிசிக்கவும் அதனிடம் ஜோஸியம் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் வசதிகள் செய்துகொடுத்திருக்கிருர்

களாம். குழந்தையின் பெற்றேரும் கூடவே வந்திருப்பதால் அவர்கள் வசிக்க ஒரு தனி விடுதியும் கொடுக்கப்பட்டிருக்கிற தாம். இன்னெரு அதிசயம் கேட்டீர்களா! அக்குழந்தை நல்ல ஸர்ப்பத்துடன் விளையாடுகிறதாம்!. இந்த அதிசயத்தைக்கண்டுதான் குழந்தையின் ஜோஸியத்தை அப்படியே நம்புகிருர்கள்....என்று தாங்கமுடியாத வியப்புடன் அந்த அம்மாள் மூச்சுவிடாமல் கூறுவதை பாக்யமும் கூடவிருந்தவர்களும் கேட்டு அபாரமான வியப்புக்கடலாடி ப்ரமித்துப் போனுர்கள். "எம்மா! அந்தக் குழந்தையை நீங்கள் பார்த்தீர்களா? அதனிடம் ஜோஸியம் கேட்டீர்களா? பாம்புடன் விளையாடிபதையும் பார்த்தீர்களா?" என்று பாக்யம் அடுக்கடுக்காய்க் கேட்டாள்.

அந்தம்மாள்:—நானு! இன்று மூன்ருவது தரமாகப் பார்த்துவிட்டு வருகிறேன். என் மக்கள் மனிதர்களுக்குக் கடிதம் எழுதி எல்லோரையும் வரும்படியாகத் தெரிவித்திருக்கிறேன். குழந்தையைப் பார்த்துக்கொண்டே இருந்தால் பசி யாறும். நாமும் குழந்தைகளைப் பெற்றிருக்கிறேம். அக்குழந்தையின் அழகுக்கோ அதிசயத்திற்கோ இந்தக் குழந்தைகள் ஈடாகுமா? எதிராகுமா? நான் அவசரமாகப் போகிறேன்"...என்று கூறிக்கொண்டே போய்விட்டாள்.

ஏற்கெனவே குழம்பித் தவிக்கும் பாக்யத்தின் மனத்திற்கு இந்த விசித்ரமான விஷயம் அவள் எதிர்பாராத ஆவலைத் தூண்டியதோடு தன்னுல் அறியமுடியாத விதம் மனத்தில் ஒருவித அமைதியைக் கொடுத்தது. தன் மகன் விஷயமாகவும் ஜோஸியம் கேட்கலாமா? என்றும் ஆவல் தூண்டியது. உடனே தன் கையில் உள்ள சில்லரையில் தாம்பூலம், பழம், புஷ்பம் முதலியவைகளை வாங்கிக்கொண்டு தோட்டத்தை நோக்கிச் சென்ருள்.

அடேயப்பா! தேர்க்கூட்டம், திருநாள் கூட்டம் என்ருல் மிகையாகாது. நெருக்கியடித்துக்கொண்டு 'நீ முன்னே, நான் முன்னே' என்று விழுந்தடித்துக்கொண்டு ஜனங்கள் உள்ளே செல்வதற்குச் சண்டை இடுவதையும் பார்த்துவிட்டு, வெளியேவரும் கூட்டத்தின் கும்மாள ஆரவாரிப்பையும் அவர்கள் அளப்பரிய வியப்புடன் பேசிக்கொண்டு வெளியே வருவதையும் பார்க்கப்பார்க்க பாக்யத்தின் ஆசைப்புயல் பின்னும் வேகமாக அடித்துக்கொள்ளத் துடங்கியது.

கூட்டம் நிற்கும் வரிசையைப் பார்த்தால், தான் உள்ளே போவதற்கு இன்று இரவுக்குள் கூட இடம் கிடைக்குமோ கிடைக்காதோ என்கிற சந்தேகம் வேறு தோன்றிவிட்டதால் முட்டிபடித்துக்கொண்டு முன்னே போக ப்ரயத்தனம் செய்வதில் இன்னும் பத்தடி பின்னுலேயே கொண்டு தள்ளிவிட்டதேயன்றி முன்னேறமுடியவில்லை. அந்தக் கூட்டத்தில் ஒருவன்

மிகவும் வேகமாய் இவர்களை இடித்து நெருக்கியடித்துக் கொண்டு ஓடுவதைக் கண்டு பலர் அவனைத் திட்டியவாறு "ஏனப்பா! இப்படி ஏதோ குடி மூழுகிவிடுவதுபோல் மிதித்துக் கால்களை ரணமாக்கியவாறு ஓடுகிறாய்? நாங்கள் மணிக்கணக்காகக் காத்திருக்கிறோம். நீ—இப்போது வருகிறவன்—முன்னாடி செல்வது என்ன அக்ரமம்! வழி கிடையாது நில்லப்பா இப்படி!" என்று தடுத்தார்கள்.

ஆத்திரத்துடன் அந்த மனிதன், "கோபிக்காதீர்கள்! நான் இப்போது அக்குழந்தையைப் பார்ப்பது 7-வது தாம் தெரியுமா! முதல்முதல் நான் பார்த்த அன்று என்னுடைய பூர்வஜென்மத்தின் வரலாற்றைக் கூறி என்னைத் திக்குமுக்காடவைத்துவிட்டது...என்பதற்குள் அங்கிருந்தவர்கள் இவனைவிட பரபரப்புடன் "ஐயா! ஐயா! உங்கள் பூர்வ ஜென்மத்தின் வரலாற்றையா சொல்லியது? எங்கே, இப்படி சற்று நில்லும்; நாங்கள் இத்தனை பேர்களும் குழந்தையைப் புதிதாகப் பார்த்துக் களிக்க வந்திருக்கிறோம். அதன் பெருமையைச் சொல்லுங்கள்; கேட்டு மகிழ்கிறோம்" என்றார்கள்.

அவன் வெகு பரபரப்புடன் பேசத்தொடங்கி "நீங்கள் இத்தனை பேரும் கட்டாயம் அந்தத் தெய்வக் குழந்தையைப் பார்த்து உபதேசம் பெறவேண்டும். நான்சென்ற ஜென்மத்தில் குசவனாகப் பிறந்து சட்டி பானை செய்யும் ஜாதித் தொழிலை நடத்திவந்தேனாம்!...என்றதைக் கேட்டதும்"என்ன! என்ன சட்டி பானை செய்யும் குயவனாய்ப் பிறந்திருந்தீர்களா? இப்போது...

அவன்:—சொல்வதற்குள் அவசரப்பட்டால் எப்படி?... ஆனால், நான்கூட அப்படித்தான் முதலில் ப்ரமித்துப்போய் பிறகுதான் நிதானித்து விசாரித்தேன். மணல்காடு என்கிற ஊரில் நீலகண்ட உடையார் என்கிறவருக்கு நான் மகனாய்ப் பிறந்திருந்தேனாம். நானும் வம்ச பாம்பரைக்கான வேலையை வெகுநன்றாகச் செய்துவந்தேனாம். என் மனைவி வெகு உத்தமமான பெண்ணாம். லட்சுமி என்பது அவள் பெயராம். அவள் எனக்குச் சகலவிதத்திலும் உதவி செய்ததோடு பக்தியாயுமிருந்தாளாம். பரம ஏழை என்றாலும் நான் என்னைவிட ஏழைகளுக்கு முக்யமாய்க் கல்யாணத்திற்காக ஓமகுண்டம், பாலிகைக் கிண்ணங்கள், அகல் முதலியவைகளைத் தருமத்திற்காகவேசெய்து கொடுத்து அந்த வழியில் நல்லபெயரெடுத்தேனாம். கார்த்திகையன்று சுமார் ஆயிரம் அகல்களும் அகண்டங்களும் செய்து கோயில்களில் இனாமாகக் கொடுத்து தீபம் ஏற்றும் கைங்கர்யம் செய்தேனாம். அந்தப் புண்யம் எனக்கு உயர்ந்த ஜென்மத்தைக் கொடுத்ததாம்...

எனது 70-ஆவது வயதில் என் மனைவி காலமாகிவிட்டாளாம். எனக்கு 5 பிள்ளைகள், இரண்டு பெண்கள் உண்டு;

அவர்கள் நல்ல நிலைமையில்தான் இருக்கிறார்களாம். நானும் 73-ஆவது வயதில் இறந்துவிட்டேனும். அந்த ஜென்மத்தில் செய்த இந்தப் புண்ணியத்திற்கே இந்த உயர்ந்த ஜென்மமும் சங்கீத வித்வத்தும் கிடைத்திருக்கிறது என்று சொல்லியதும், நான் இதை பரீக்ஷிக்க எண்ணி, அதே மணல்காடு என்ற ஊருக்கு அன்றிரவே சென்றேன்.

என்ன ஆச்சரியம்! அந்த குயவனின் வீட்டைப்பற்றி விசாரித்துத் தகவலறிந்து யாரோ வழிப்போக்கன் வந்திருப்பதுபோலும் தாகத்திற்கு மோர் வேண்டும் என்று கேட்பது போலும் நடித்துக்கொண்டு அதே வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்தேன். எனக்கே என்னையறியாத ஆச்சரியம் தலைக்குமேல் தாண்டவமாடியும் நான் ஆனந்தமாய் பைரவி ராகத்தைப் பாடிக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் 50 வயதுடைய ஒருவன் வந்து உட்கார்ந்து ஸ்வாரஸ்யமாகக் கேட்டபடியே ஆனந்தித்தான்...சற்று பொறுத்து "ஐயா! நீங்க சங்கீத வித்வானுங்களா! உம்!...எங்க அப்பாரு இருக்கச்சிலே எத்தனை சங்கீதக்காரங்களுக்கு இனமா கடவாத்யம் செஞ்சு குடுப்பாரு' தெரியுமா? அவருக்கு சங்கீதமென்றால் உசிருங்க. மண்ணு திகைக்கச்சேகூட பாடிக்கிட்டேதான் துகைப்பாரு. எங்கஜாதிஜனங்ககூட 'ஏண்டா...நீ கோராகும்ப சாமியாரா?...பாடிகிட்டே சட்டி பானே பண்றயே' இன்னு கேட்பாங்க. எங்கப்பா அத்தினி நல்லவரு" என்றான்.

எனக்கு அதைக் கேட்கும்போது உடம்பு புல்லரித்துவிட்டது. இவன் என்மகன் பாண்டுரங்கனும்...அடாடா! அக்குழந்தை உண்மையில் தெய்வக் குழந்தைதான் என்று சத்யமாகத் தோன்றியது. என் பூர்வஜென்மத்தைப்பற்றி அந்தக் குழந்தை சொல்லிய சகல விஷயத்தையும் அவனிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டே தெரிந்துகொண்டேன்.

"எங்கப்பாவும் அம்மாவும் பொட்டக்ராபு படம் எடுத்துக்கிட்டிருக்காங்க; அதைப் பாருங்க" என்று அவனுகை ஒரு புகைப்படத்தைக் கொண்டு காட்டினான். என் உணர்ச்சியை நான் என்னென்று சொல்வேன்! நானு பூர்வ ஜென்மத்தில் இப்படி இருந்தேன்? இது நானு?...இவள் என் மனைவியா?" என்று மாறிமாறிவியப்புடன் பார்த்தேன். என்மகன் என்னை உற்று கவனித்தான். "சாமீ! எங்க அப்பாரு கன்னத்துலே கூட இப்பிடிதானுங்க கருத்த மச்சம் அழவா இருந்துதுங்க. அதனால்தான் அவரு பத்தியா அகலுங்க, ஓமகுண்டங்க, கல்யாண அடுக்கு சாமானுங்க அல்லாம் செய்துகொடுத்து நல்ல தருமவான்னு பேரெடுத்தாரு...ஓங்க காதுபோலத்தான் அவருக்கும் காது வளேசலா இருந்துதுங்க...

என்று அவன் சொல்லச்சொல்ல எனக்குக் குழப்பமும் கலவரமும் ஆச்சரியமும் அதிகரித்துவிட்டது. "நான்

தாண்டா உங்க தகப்பன்'' என்று சொல்லிவிடலாமா என்று துடித்தது. ஆனால், என்னையே நான் சமாளித்துக்கொண்டேன். நாம் அப்படிச்சொன்னால் கட்டாயம் பேயோ பிசாசோ என்று எண்ணி ஒரே அடியில் மண்டையைக் கிழித்துவிட்டால் என்ன செய்வது? தெய்வக் குழந்தை சொல்லியது என்னவோ சத்யவாக்கு. உண்மை விளங்கிவிட்டது...இனிமேல் நாம் போய்விடலாம்... என்று எண்ணினேன்.

இதற்குள் அந்த மகன் "சாமீ! நீங்க எந்த ஊருங்க. ஒங்களே பாத்தா எங்கப்பாவெ பாக்கறமாதிரி ஒரு எண்ணம் தோணுதுங்க. அவரு கையாலே சேஞ்சுவைச்ச கடவாத்யம் ஒண்ணு இருக்குதுங்க. நீங்க நல்லா பாட்றீங்க; அதுக்கு யாரையாச்சும் கடம் வாசிக்கச் சொல்லுங்க. எங்க வூட்லே அதுக்கு மதிப்பில்லேங்க. அரிசி கொட்டிவைக்கலாமா? பருப்பு புளி வைக்கலாமான்னு மூளை கெட்டு கேக்கராங்க. எங்க அப்பாரு ஞ்யாபகமாக நீங்க எடுத்திக்கிட்டுப்போங்க'' என்று கூறி ஒரு அழகான கடவாத்யத்தை—நான் போன ஜென்மத்தில் செய்த வாத்யத்தை என்கையில் கொடுத்தான். அப்போது எனக்கு எப்படித்தான் இருந்தது தெரியுமா? சொல்லவே முடியவில்லை! அக்குழந்தைக்கு அவ் வாத்யத்தைப் பரிசாகக்கொடுத்துவிடவேண்டுமென்று தோன்றியது. சென்ற ஜென்மத்தில் நான் செய்த கடவாத்யத்தை என்மகன் கையால் நானே இந்த ஜென்மத்தில் பெறுவதென்றால் இந்த விசித்திரத்தை உலகத்தில் பார்த்திருக்கிறோமா? கேட்டிருக்கிறோமா? ஆச்சரியம் தாங்கவில்லை. எனது சந்தேக நிவர்த்தியுடன் கடவாத்ய சகிதம் ஓடிவந்தேன்....இந்த கும்பலில் கடத்தைக் கொண்டுவந்தால் எங்கே அது உடைந்து விடுமோ என்கிற பயத்தால் கோயிலில் பட்டாச்சாரியிடம் கொடுத்து ஸன்னதியில் வைக்கச்சொல்லிவிட்டு நான் குழந்தையை மறுபடியும் தரிசித்து இந்த உண்மையைச் சொல்லி இன்னும் விஷயமறிய வேண்டி ஓடுகிறேன்!...என்று கூறிவிட்டு கும்பலைத் தள்ளி முட்டியடித்தவாறு ஓடமுயன்று சென்றான்.

பாக்யலக்ஷ்மி இதைப் பக்கத்திலேயே நின்று கேட்டுக் கரைகாணாத வியப்பும் திகைப்பும் அடைந்து எப்படியாவது இந்த ஜன ஸமுத்திரத்தில் நீந்தியடித்துக்கொண்டுபோய் அந்தத் தெய்வக்குழந்தையைப் பார்த்துவிட்டுத்தான் வர வேண்டும் என்ற உறுதி பலமாக இதயத்தில் எழுந்து ஊக்கிய வேகத்தில் நீந்தியடித்துச் செல்லத்தொடங்கினாள். மனம் காற்றைவிடக் கடியவேகத்தில் பறக்கிறதுபோல் கால்கள் பறக்கமுடியவில்லை. நசுங்கித் துவண்டுவிடும்போலாகிவிட்டன. எனினும், முயற்சியை விடாமல் முன்னேறத்தொடங்கினாள். இடிபடுவது கூடத் தெரியாமல் ஆவலே தலைதூக்கி நின்றது.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மிஸஸ் டிரைஸ்டேலின் நல்ல எண்ணம்

மிஸஸ் டிரைஸ்டேலின் எண்ணம் கீழ்க்கண்டபடி: பிராம்மண ஜாதியில் பாலிய விவாகம் காரணமாக பாலிய விதவைகளின் எண்ணிக்கை அதிகம். 10, 12 வயதுக்குள்பட்ட விதவைகள் பாடசாலையில் சென்று படிக்கும் வயதினர். 10 வயதுக்கு மேல் ஆங்கில பாஷையை ஆரம்பித்து S. S. L. C. வரைக்குமாவது படிப்பதற்குத் தகுதியானவர். மேலும் புனர்விவாகம் வழக்கத்தில் இல்லாமையால் இந்தப் பெண்கள் தங்கள் ஆயுட்காலம் முழுவதையும் உபாத்தினிகளாகவோ, டாக்டர்களாகவோ இருந்து பொதுஜன ஸேவை செய்வதற்கு அர்ப்பணம் செய்யமுடியும். (விதவைப்பெண்கள் மற்றப்பெண்களுக்குப் பாடசாலைகளில் பாடம் கற்பிப்பதை அச்சானியமாகக்கூடக் கருதுவதாக ஒரு சட்ட சபை அங்கத்தினர் சொன்னார்!! தாழ்த்தப்பட்டவர்களும் பிராமண விதவைகளும் ஜனசமூகத்தில் ஒரே மாதிரியாக இழிவாகவே நடத்தப்படுவதாயும், இந்த இருவகுப்பினரும் சீர்த்திருத்தக்காரர்களின் அனுதாபத்துக்கு இலக்கானவர்கள் என்றும் ஒருவர் பேசினார்.)

மிஸஸ் டிரைஸ்டேலுக்குச் செய்த அநியாயம்

மிஸஸ் டிரைஸ்டேல் எத்தனை திறமையுடன் பெண் கல்வி அபிவிருத்திக்காகப் பாடுபட்டார்! விதவைப் பெண்கள் அதிலும் பாலிய விதவைகள் வீட்டிலடைபட்டு வாழ்க்கையில் ஒருவித சந்தோஷமுமின்றி அவர்கள் வாழ்க்கையே நிஷ்பிரயோஜனம், அவர்களே பூமிக்கு பாரம் என்னும் மனோபாவத்துடன் சாவை எதிர்ப்பார்த்துக்கொண்டிருப்பவர்கள். இந்த நிலையில் இருப்பவர்கள் கல்வி கற்று உயர்ந்த ஜாதிப் பெண்களுக்குப் பண்பாட்டுடன் கல்வி கற்பித்தால் தேசமே முன்னேற்றமடையும் என்னும் சிறந்த உத்தம நோக்கத்துடன் பாடுபட்ட மிஸஸ் டிரைஸ்டேலின் அருமையை அறியாமல் அவரது உத்தியோகக் கால அளவுக்குள் அவர் ரிடயர் ஆகிப்போகும்படி செய்தது நிரம்ப அநியாயம். அவர் நம் நாட்டினருமல்ல; ஆங்கில ராஜயத்தைச் சேர்ந்தவர்; அவர் வேலையைவிட்டுப் போவதில் எங்களுக்கெல்லாம் நிரம்ப வருத்தம். கல்வியிலாகாவைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அவருக்காக பிரிவுபசாரங்கள் ஆங்காங்கு வைத்து அவரது உழைப்பைப் பாராட்டினோம். 1923, ஏப்ரல் மாதம பிரியாவிடை பெற்றுக்கொண்டு அவர் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச்சென்றார். அவரது உருவச்சிலை யொன்று செய்து ஐஸ்ஹௌஸில் வைத்தோம். அவர் ஞாபகார்த்தமாக பணம் சேர்த்து லேடிவில்லிங்டன் ஹைஸ்கூலில் பிரதி வருஷமும் 2 பரிசுகள் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தோம்.

என்னுடைய 8 மாத விடுமுறை ஓய்வு.

ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நவம்பர் கடைசிவரைக்கும் டாக்டர் ஸர்பிகேட்டுடன் லீவு எடுத்துக்கொண்டேன். தொண்டையில் டான்ஸில்ஸ் ஆபரேஷனுக்குப் பிறகு காது சற்று மந்தமாகிக்கொண்டுவந்தது. ஓய்வு எடுத்துக்கொண்டு இடம் மாற்றிச் சென்றால் நல்லது என்று டாக்டர்கள் அபிப்பிராயப் பட்டதால், லீவு எடுத்தேன். அருமையான சித்தி ஐஸ்ஹௌஸிலேயே இருந்தார். எனக்குப் பதில் என் சகோதரி ஸ்வர்ணம்பாள் ஐஸ் ஹௌஸிலிருந்து பார்த்துக்கொண்டாள்.

1923-கோடை விடுமுறை

ஏப்ரல் 15-ஆம் தேதி நாங்கள் சிலபேர் Grand - anicut க்குப் போய் காவிரி நதியில் ஸ்நானம் செய்துகொண்டு அருகிலிருந்த சில இடங்களைப் போய்ப் பார்த்துவந்தோம். பாடசாலைகள் மூடினவுடன் ஸ்வர்ணம் முதலான மற்றவர்களும் எங்களுடன் வந்து சேர்ந்துகொண்டார்கள். ஒரு மாதம் எங்கள் அருமையான பாபநாசத்தில் போயிருந்துகொண்டு அகஸ்தியர் தீர்த்தம் அருவி ஸ்நானம் செய்துகொண்டிருந்தோம். பிறகு குற்றாலத்தில் சாரல் கட்டியவுடன், ஐந்தருவி ரஸ்தாவிலிருந்த ஸ்ரீமான் நம்பெருமாள் செட்டியார் பங்களாவில் 2 வாரம் தங்கி, ஐந்தருவி, சம்பா அருவி முதலிய இடங்களுக்கு அடிக்கடி போயவந்தோம். என் சகோதரி பாலம் அவள் குழந்தைகளுடனும், செல்லம் அவள் குழந்தைகளுடனும் எங்களுடன் கொஞ்ச நாட்கள் வந்திருந்து அருவி ஸ்நானம் செய்துவிட்டு ஜூன் கடைசியில் திரும்பிப் போனார்கள். காந்தாமணி டில்லியில் லேடி ஹார்டிஞ்ஜ் மெடிகல் காலேஜில் F. Sc. க்கு படித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு விடுமுறை மே மாதம் நடுவிலிருந்து 3 மாதம். என் பெற்றோர்கள் காந்தாமணி நான் நால்வரும் திருவனந்தபுரம் திவான் பங்களா காம்பவுண்டில் ஒரு சிறு பங்களாவில் ஜூலை கடைசிவரைக்கும் இருந்து குற்றாலம் சாரலை நன்றாக அனுபவித்தோம். எந்தவித அசௌக்கியம் உள்ளவர்களும் குற்றாலத்தில் சாரல் காலத்தில் ஒன்றிரண்டு மாதங்கள் இருந்து, அருவியில் 2 வேளை ஸ்நானம் செய்து, பசுமையான கறிகாய்களை வாங்கி சாப்பிட்டுக்கொண்டு, குற்றாலேச்வரரையும் குழலம்மையையும் தரிசனம் செய்துகொண்டு கவலையின்றி மனதை அமைதியாக வைத்துக்கொண்டால் வியாதியெல்லாம் நீங்கிவிடும். சாரல் கட்டியுள்ள "ஸீஸன்" காலத்தில் வேண்டிய கறிகாய்கள், கீரைவகைகள், அருவி ஸ்நானத்துக்கு வேண்டிய தைல வகைகள், கோவில் பூஜை சாமான்கள் யாவும் விசேஷமாகக் கிடைக்கும். இந்தக் காலத்தைப் போல அந்த காலத்தில் அத்தனை ஜன நெருக்கமும் கூட்டமும் கிடையாது. ஆகவே, வசதியாக அருவியின் கீழ் உட்கார்ந்து உடம்பு வலி கெடும்படி எத்தனை நேரம் வேண்டுமாலும் ஸ்நானம் செய்யலாம்.

ஆகஸ்டு மாதம் முழுவதும் பல இடங்களில் சுற்றுபிரயாணம் செய் தாம். முதலில் திருவனந்தபுரம் - செங்கோட்டையிலிருந்து புனலூர் வரைக்கும் உள்ள பசுமையான வளமையான

மலைக் காக்ஷிகள், மலைக் குகைகள், போகும் வழி முழுவதும் மழைச்சாரல், யாவும் ரம்யமும் இன்பமும் ஆனவை. திருவனந்தபுரத்தில் அப்போது திவானாயிருந்த ஸ்ரீமான் ராகவய்யா அவர்கள் அரண்மனையில் 4 நாள் தங்கினோம். அவரது அருமைப்புதல்வி சாரதா எங்களைப் பல இடங்களுக்கும் அழைத்துச்சென்று காண்பித்தாள். குமரிமுனையில் 2 நாளிருந்து ஸமுத்திர ஸ்நானம் செய்தோம். கடல்கரையோடு மேற்குநோக்கி நடந்தால் ஒரு குன்றின் மேல் கிறிஸ்தவர்கள் அமைத்திருக்கும் கன்னிமேரியின் அழகியசிலை—ஹிந்துக்களுடைய கன்னிகை குமரி, கிறிஸ்வர்களின் கன்னிகை மேரி (மாரி, மாரியம்மாள்?) இருவரும் பரந்த கடலைப் பார்த்துக்கொண்டு பக்தர்களுக்கு காட்சியளித்துக் கொண்டு இருக்கின்றனர். கடல்கரையில் பலவித நிறத்துடன் கூடிய மணல்களைக் காணலாம். மெருகு மணல், அரிசி மணல், கெம்பு மணல், நொய் மணல் இத்தியாதி; கடல் சோழிகள், சங்குகள், கிளிஞ்சல்கள் முதலியவை.

பார்வதிதேவியாகிய குமரியம்மன் பரமசிவனையே விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று இங்கு வந்து தவமிருந்ததாயும், ஏதோ காரணத்தால், பரமசிவன் வருவதற்குத் தாமதமாகி விவாகம் நின்றுவிட்டதாயும், அதனால் அம்பிகைக்கு வருத்தமுண்டாகி, விவாகத்துக்காக சேகரித்திருந்த அரிசி, பருப்பு, கடுகு, உளுந்து எல்லாம் மணலாகும்படி சபித்துவிட்டு, தான் அங்கு கன்னிகையாகவே கோவிலில் எழுந்தருளிவிட்டதாகவும் ஐதிகம்.

பிறகு, சுசீந்திரம், நாகர்கோவில், திருநெல்வேலி இவிடங்களைப் பார்த்துவிட்டு மதுரைக்கு வந்தோம். அங்கு ஒரு மாதர்சங்கம்: ஸ்ரீ சங்கர ராமய்யரின் மனைவி சுப்பலக்ஷ்மியம்மாள் அதற்குக் காரியதரிசி. மாதர் சங்கத்தில் ஒரு உபந்யாசம் செய்தேன். திருப்பரங்குன்றம் போய் ஸ்வாமி தரிசினம் செய்து, ஆகஸ்ட்-12 ஆம் தேதி யாகிய ஆடி அமாவாசை யன்று திருவையாற்றில், காவிரி நதியில் ஸ்நானம் செய்துவிட்டு, சென்னை திரும்பினோம்.

ஆகஸ்ட்-18 ஆந் தேதி ஐஸ் ஹௌஸில் பழைய மாணவிகள் தினம் விமரிசையாக நடந்தது.

[அடுத்த இதழில்:—எங்கள் வட இந்திய சுற்றுப் பிரயாணம்.]

யோகி சுத்தானந்த பாரதியார்

இயற்றிய

காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உயரிய கிளேஸ் பதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.

டீ பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க

இலவசச் சம்பள நிதிக்கே!

ஸ்ரீமதி வசுமதி ராமஸ்வாமி

யாழின் இசை

ஆம். கடைந்தெடுத்த சிற்பம்போல் ஒரு வீணையை அழகாகச் செய்து கண்ணாடி அலமாரியில் வைத்துவிட்டால் அந்த பொருளுக்கு மகிமை வருகிறதா? மணிக்கணக்கில் அதைப் பார்த்துக் கொண்டிருந்தால் பார்ப்பவர்க்கு இன்பமா? அல்லது அப்பொருளுக்கு மகாத்மியமா? இல்லையே! ஏன்?

ஒவ்வொரு ஸ்தூலப் பொருளுக்கும் ஒரு ஜீவசக்தி வ்யாபித்தாலன்றி அப்பொருளுக்குப் பெருமை இல்லை. அழகான மலர் இருக்கிறது. நம்ப பட்டணத்து கனகாம்பரம் நீலாம்பரம் போல் மெல்லிய இதழுடன் சிலுக்கிறது. ஆனால், அதை உயர்ந்த ஜாதி மலரென்றோ ஒரு பூஜைக்குகந்தமலரென்றோ சொல்ல முடியுமா? அழகும் அத்துடன் மணமும் வீசும் ஜாதிமல்லிகையை நாம் உயர்வாக மதிக்கின்றோம். புஷ்பத்திற்கு அரசியான ரோஜா மலரைப் போற்றுகிறோம்.

அப்படியே விதவிதமான கனிகள் கடவுள் படைப்பில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், காட்டாமணிப் பழத்தை நாம் மாம் பழத்திற்கு சாதர்சமாக மதிப்பிடுகிறோமோ? எந்த ஸ்தூலப் பொருளுக்கும், எந்த ஜீவப் பொருளுக்கும் பொருளின் அழகு மட்டும், போராது. அதற்கு மேன்மை கொடுப்பது குணமே.

அழகான வெண்கல மணி கட்டித்தொங்குகிறது. பார்க்கப் பார்க்கப் பளபளப்புடன் மின்னுகிறது. ஆனால், அதை அடித்து ஓம் என்ற நாதத்தை எங்கும் மிதக்கச்செய்தாலல்லவா மணியின பெருமை பூரணத்துவமடையும்?

மலருக்கும், கனிக்கும், பொருளுக்கும் பாலுக்கும், தேனுக்கும் தான் குணமும், மணமும் தேவையென்று நினைக்கவேண்டாம். கடவுள் படைப்பில் மக்களுக்கும் இந்த குணமிருந்தால்தான் பெருமை.

வீரனெனப் போற்றுகிறோம். தீரனெனப் போற்றுகிறோம். தியாகியெனப் பெருமைப்படுகிறோம். தர்மத்தில் கர்ணனென்று களிக்கிறோம். பக்தன், சித்தன், கலைஞன், கவிஞன் என்றெல்லாம் போற்றி பெருமைப்படுகிறோம். ஆனால், அத்தகைய பெருமை யாரால் அடைகிறார்கள்? எப்படி அடைகிறார்கள்? என்பதை சிந்திக்கிறோமா? அந்த சக்தியை நாம் உரிய முறையில் போற்றுகிறோமா? இல்லையே, ஏன்?

ஒரு கணவனுக்கு உற்ற மனைவி வாழ்ந்தாளானால் எந்த முறையிலும் அவன் பிரகாசிப்பானென்பதில் சந்தேகமேயில்லை.

குழந்தைகள் பிறந்தால் நாம் மூன்று பெயர்கள் வைக்கிறோம். ஆனால், ஒரு பெயரில்தான் வழங்குவார்கள். போதாதற்கு சரஸ்வதிஎன்று அழகாக பெயரிட்டால் சச்சு, சச்சி, சாச்சி என்று கூட வழங்குவார்கள்! வால்மீகி ஒரு பெரிய கிரந்தத்தை எழுதினார். அந்த கிரந்த—குழந்தைக்கு மூன்று பெயரிட்டார்—ராமாயணம், பௌலஸ்த்ய வதம், சீதாசரித மஹத்வம் என்று மூன்று அழகான பெயர்கள். ஆனால், அது ராமாயணமென வழங்குவதைவிட 'சீதாயா: சரிதம் மஹத்' என்று வழங்கினால் பொருந்தும். ராமாயணத்திற்குப் பெருமை அளிப்பது எது? ராமருடைய பிதுர்வாக்கிய பரிபாலனம், ராஜ்ய தியாகம், சாதுக்களை

ரக்ஷிக்கும் பொருட்டு அசுரவதம், வீரத்தைக் காட்ட ராவண யுத்தம், மறுபடியும் உத்தர ராமாயணத்தில் ஆதர்சனராஜாவாக விளங்க சீதையையே தியாகம் செய்வது—இவைகளெல்லாம் ராமாயணத்தின் அணிகலன்கள். ஆனல், அதைத் தூண்டின சக்தி எது?

ராமாயணத்தின் ஜீவநாடி சுந்தரகாண்டம். சீதாதேவி ராம பிரானைப் பிரிந்து அசோகவனத்தில் சத்துருவின் நாட்டில் சிறை இருக்கின்ருள்.

பிரிவை அறியாத பிரியை. அசுரக்கூட்டத்தின்மத்தியில் புலிக் கூட்டத்தின்மத்தியில் பசுங்கன்றைப்போல் இருக்கிருள். கடல் கடந்த நாட்டில் சிறைப்பட்டிருக்கின்ருள். எவ்வளவு கஷ்டமான நிலை. அந்த சமயத்தில் அநுமார் எதிரில் தோன்றி தான் ராம தூதனென தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளுகிருர். சீதை முதலில் சந்தேகிக்கிருள். அவன் அசுரக்கூட்டத்தை சேர்ந்தவ னல்ல வென்று தெளிந்து ராமரைப்பற்றி விசாரிக்கிருள். தன் னுடைய ஆவலைச் சொல்லுகிருள்.

அநுமார் 'உன்னை தோளில் அப்படியே தூக்கிக்கொண்டு போய் ராமரிடம் சேர்ப்பிக்கிறேன்' என்கிருர். சீதை அதற்கு நாசூக்கான பதில் சொல்லுகிருள்.

> **தீயமாணும் து மாம் த்ருஷ்ட்வா ராக்ஷஸா பீமவிக்ரமா:**
> **அனுகச்சேயுராதிஷ்டா ரவணேன துராத்மனு॥**

என்று சீதை வாக்கியம்.

மறுபடியும் அநுமார் தன்னுடைய விசுவரூபத்தைக் காட்டு கிருர். தன்னல் சாதிக்கமுடியாததொன்றுமில்லை; கடலைக் கடந்து விடுவேன்; வழியில் எதிர்க்கும் அசுரர்களை மண்ணைக் கவ்வச் செய்துவிடுவேனென்று உறுதி செய்கிருர்.

அப்பொழுது சீதை "விஷயத்தை சொல்லாவிட்டால் இந்த குரங்கு நம்மைவிடாதுபோலிருக்கிறதே" என்று எண்ணுகிருள். சொல்லவும் சொல்லுகிருள்:

> **இதி ஸஞ்சிந்த்ய ஹநுமான் ததாப்லவக ஸத்தம:**
> **தர்சயாமாஸ வைதேஹ்யா: ஸ்வரூபமரிமர்த்தன:॥**

நான் உன் தோளில் வந்துவிடலாம். எனக்கும் ராமரைக் காண இருக்கும் ஆவலில் மனம் சிந்திக்கும் சக்தியை இழந்து விட்டிருக்கிறது. ஆனல், உன்னுடன் நான் கிளம்பிவிட்டால் ராம பராக்கிரமத்தை அவமதிப்பதாகும். மனைவியை அபகரித்துப் போன சத்துருவைப் போர்க்களத்தில்வென்று வெற்றி அடையப் போகும் ராமனின் பெருமையை குறைத்தவளாவேன். சீதையை ராவணன் தூக்கிக்கொண்டுபோனன். அவனை வென்று மனை வியை மீட்க வகையற்ற ராமன் ஒரு குரங்கை ரகசியமாக அனுப்பி சீதையை இரவோடுஇரவாக திருப்பிக்கொண்டுவரச்செய்தாராம். இப்படி கல், மண், புல், பூமி உள்ளவரை மக்கள் பேசி ராமரை இகழமாட்டார்களா? முடிவாக,

> **ச்ருதாஹி த்ருஷ்டாச்ச மயா பராக்ரமா**
> **மஹாத்மனஸ்தஸ்ய ரணுவமர்தின:**
> **ந தேவ கந்தர்வ புஜங்க ராக்ஷஸா**
> **பவந்தி ராமேண ஸமா ஹி ஸம்யுகே॥**

இந்த வாக்கியங்கள் அவள் வாயிலிருந்து உதிர்ந்த மணிகள். சீதை அந்த சந்தர்ப்பத்தில் அநுமார் யோசனைப்படி நடந்திருந்தால் ராமருடைய பராக்கிரமம், வீரம், சௌர்யம் அமரத்துவமடையுமா? சீதா சரித மஹத்வத்தினால்தான் ராமாயணம். ராமாயணமென்ற ரத்னஹாரத்தில் சீதைதான் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் மணி. அதன் ஒளிதான் ராமரிடம் வீசுகிறது.

ஹநுமானின் வாலைப்பற்றின நெருப்பை "சீதோ பவ ஹநூமத:" என்று சொல்லி குளிரப்பண்ணி நீராக்கின ஸ்ரீ தாபிராட்டிக்கு, "பஸ்மீ பவ" என்று கூறி ராவணாதிகளைச் சாம்பராக்கித் தன்னை ரக்ஷித்துக்கொள்ள சக்தி உண்டு; ஆனால், இராமபிரானே லங்கைக்கு வந்து வென்றிகொண்டு தன்னைக் கைக்கொள்வதுதான் அவருக்குத் தகுதியாகும்; தன் நிலைமைக்கும் அதுவே பொருந்தும் என்றே அவள் தன்னுடைய சக்தியைக் கையாளாமல் விட்டாள்; ஹநுமனின் யோசனையையும் ப்ரயோஜனப் படுத்திக்கொள்ளாமல் விட்டாள். இதையே "அவள் ஸ்வரூபத்திற்குச் சேர்ந்த செய்கை" என்று ஸம்பரதாயஸ்தினர் சிறப்பித்துக் கூறுவர். இங்கு கம்பன் வாக்கு வருமாறு:—

"......என் சொல்லினால் சுடுவேன் அது தூயவன், வில்லினாற்றற்கு மாசென்று வீசினேன்"

மனைவியின் நிலை அக்காலத்தில் மட்டுமல்ல—காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்க பழக்கவழக்கங்கள் மாறலாம்; ஆனால், கணவனுக்குப் பெருமை அளிக்கும் இசை மனைவிதான்—அன்றும், இன்றும், என்றுமே.

**"புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை."**

பாரதியார் "மானம் சேர்ப்பது மனைவியின் வாயிலடா" என்று ஒரே வார்த்தையாகச் சொல்லிவிட்டார்.

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (இனேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்
ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி
பாதாஞ்சலி
ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை

இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை
ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்
ரூ. 1-2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வீரவனிதா
நவீன சேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை

பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
அணா. 8
கானகலா
தாய் உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
அணா. 6.
உளுத்த இதயம்

ஆவணக் காப்பக ... சென்னை-600 008
18189